# ‘நாட்டைக் காக்கும் நிதி’க்கு ரூபா 50 ஆயிரம் நன்கொடை

Reg'stered as a News Paqer in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 125
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 2 ரபி. ஆகிர் 11 செவ்வாய்க்கிழமை [16-6-70]

**ஈழநாடு சந்தா**

| | | தினப் பதிப்பு | | வாரப் பதிப்பு |
|---|---|---|---|---|
| 3 மாதம் | ரூ. | 18-00 | ரூ. | 4-00 |
| 6 மாதம் | ரூ. | 34-00 | ரூ. | 7-50 |
| 1 வருடம் | ரூ. | 66-00 | ரூ. | 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## பீடி உற்பத்தியாளர் சார்பில் செனட்டர் நீதிராசா வழங்கினர்

கோட்டை, திங்கள்

தேசப் பாதுகாப்பு நிதிக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து காசோலைகளும், காசுக்கட்டளைகளும் வந்து குவிந்தவண்ணமிருக்கின்றன.

தேசத்தை எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிகளிலிருந்து மீட்பதற்கு பொது மக்கள் காட்டும் ஆர்வம் குறித்து பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்காவும், நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவும் பெரிதும் பூரிப்பு அடைந்துள்ளார்கள்.

தொழிலாளர்கள், விவசாயிகள், முதலாளிகள், ஏழைகள், பணக்காரர்கள் என்று வாழ்க்கையின் எல்லா நிலைகளிலுமுள்ள மக்கள் அனைவரும் மனமுவந்து நாட்டைக் காக்கும் பணிக்கு நிதிகள் வழங்குவதில் முன்நிற்கிறார்கள்.

நேற்று அகில இலங்கை பீடி உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான காசோலையொன்று திறைசேரி காரியதரிசியிடம் கையளிக்கப்பட்டது. இக் காசோலையை செனட்டர் நீதிராஜா வழங்கினர்.

**சபாநாயகரின் நன்கொடை**

நேற்று சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்ன ‘தேச பாதுகாப்பு நிதி’க்காக 25 ஆயிரம் ரூபாவை நிதி மந்திரி திரு. என். எம். பெரேராவிடம் கையளித்துள்ளார்.

# ‘லங்கா சலுசல’ அரசாங்க கூட்டுத்தாபனமாக மாறும்

## புதிய தலைவர் தரும் தகவல்

கொழும்பு, திங்கள்

இதுகாலவரை ஜவுளி இறக்குமதியில் ஏக ஸ்தாபனமாக விளங்கிய ‘லங்கா சலுசல’ அரசாங்கக் கூட்டுத்தாபனமாக மாற்றப்படவிருக்கிறது.

இத்தகவலைச் சலுசலாவின் புதிய தலைவர் திரு. வி. ரி. டி. பெரேரா நமது நிருபரிடம் கூறினர்.

இப்பொழுது சலுசலவின் 51 வீத பங்குகள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திடமும், எஞ்சிய பகுதி அரசாங்கத்திடமும் உள்ளது. அரசாங்கத்தின் கீழ் உள்ள ஒரு கூட்டுத்தாபனமாக்குவதா அல்லது அரசாங்கம் முழுப் பங்குகளையும் தன் பொறுப்பில் எடுத்து ஒரு பூரண அரசாங்க நிறுவனமாக்குவதா என்பது பற்றி ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (சிபிஏ)

### கத்திக் குத்து

தாவடி, ஞாயிறு

தாவடி-மானிப்பாய் வீதிக் கண்மையில் கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. சுன்னாகம் பொலிசார் புலன்விசாரணை நடாத்துகிறார்கள்.

## நயினாதீவு உற்சவ போக்கு வரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 18-ம், 19-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் நயினாதீவு தேர், தீர்த்தோற்சவத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதிகள் சம்பந்தமான ஏற்பாடுகள் பற்றி யாழ். அரசாங்க செயலகத்தில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் தலைமையில் ஆலோசனைக்கூட்டமொன்று நடைபெற்றது

இக்கூட்டத்தில் இ போ சபை அதிகாரிகள் பொலிஸ் பகுதி அதிகாரி, ஊர்காவற்றுறைக் காரியாதிகாரி திரு. எஸ் விநாயகலிங்கம், தலைமைக காரியாலய காரியாதிகாரி உட்படப் பலர் கலந்துகொண்டனர்

இந்த முறை நாகபூஷணி அம்பாள் தேர், தீர்த்த வருடாந்த உற்சவத்துடன், சிங்கள மக்களது ‘பொசன்’ பண்டிகையும் வருவதால் திகதிகளில் இங்கிருந்து நயினாதீவுக்குச் செல்லும்.

படகுகளில் குறிப்பிட்ட அளவு யாத்திரிகர்களே அனுமதிக்கப்படுவார்கள்

. யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்கான படகுகள் அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும் இதுவரை 11 லோஞ்சுகளும், 3 மீன்பிடிவள்ளங்களுமே அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரங்களை பெற்றுள்ளது. நயினாதீவுக்கு இரு சமூகத்தவரும் பக்தியுடன் யாத்திரை செய்வதாலும் சுருக்கமான பாதையை மக்கள் நாடிப் பிரயாணம் செய்தால் விபத்துக்கள் தவிர்க்கப்படலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

அதிகமாக யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதைத் தடுக்கப் பொலிஸ் பகுதியார் சகல துறைகளிலும் காவல்

## தந்திக்கம்பி களவு

வேலணை, திங்கள்

தீவுப்பகுதியில் அடிக்கடி தந்திக்கம்பிக் களவு நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது. சில தினங்களுக்கு முன் அல்லைப்பிட்டிக்கும், மண்டைதீவுக்குமிடையே உள்ள பிரதான வீதியில் தந்திக்கம்பி களவாடப்பட்டதால் வேலணைப் பகுதித் தந்தித் தொடர்பு பாதிக்கப்பட்டதையிட்டு மீண்டும் இரு தினங்களின்பின் கூடிய தூரம்வரை அதே எல்லையில் கம்பி களவாடப்பட்டிருந்தது.

# களத்துமேட்டிலிருந்து நேரடியாக அரசாங்கம் நெல்லை வாங்கும்

## தரகர் மோசடிகளிலிருந்து விவசாயிகளுக்கு பாதுகாப்பு

கோட்டை, திங்கள்

புதிய மக்கள் அரசாங்கம் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யும் பண்டகசாலைக்கு விவசாயிகள் நெல்லைக்கொண்டு வரும்வரை காத்திராமல் அவர்களது களத்து மேட்டுக்கே சென்று நெல்லைக் கொள்வனவு செய்யவிருக்கிறது. இவ்வித மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கையில் தரகர்களாக இருக்கும் முதலாளிகளின் சுரண்டல்களிலிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள்.

அருவி வெட்டுங்காலத்தில் சில முதலாளிகளின் ஏகபோக உரிமையை உடைத்தெறிய, தனியார்துறை போக்கு வரத்து பிரதிநிதிகள், தனியார் லொறிகள், உழவு யந்திரச் சொந்தக்காரர்கள் ஆகியோருக்கு மக்கள் அரசாங்கம் ஆதரவு கொடுக்கும்.

விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர்ஹொபகடுவதனிப்பட்ட முறையில், எல்லா லொறி, உழவு யந்திரச் சொந்தக் காரர்களுக்கும், அருவி வெட்டுங்காலத்தில், அரசாங்கம் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்ய போக்குவரத்துக்களுக்கு உதவிபுரியுமாறும், அது நாட்டுக்குச் செய்யும்சேவை எனவும் கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கூப்பனுக்கு இரண்டு கொத்து அரிசி தருவதாகச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற இவ்விதம் செய்யவேண்டியுள்ளது.

7 கோடி புசல்நெல் உற்

இவ்வித நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் கூறினர்.

அமைச்சர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், பலவகையில் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவிசெய்கிறது. இதனல் முடிவில் நடுத்தர மக்கள் பயன்அடைவர். அரசாங்கம், விவசாயிகளுக்குக் கடனுதவி, உரம் தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றைக் கொடுக்கிறது. அப்படிஇருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லில் சிறு பகுதியே அரசாங்கத்தின் கைக்கு வருகிறது.

இதற்குரிய காரணம் (4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் துங்கு இங்கு தங்கிச் செல்வார்

கொழும்பு, செவ்

## லேக்கவுஸ் நிறுவனம் பற்றி ஆராய ரேயல் கமிஷன்! நியமிக்கவேண்டுமென மந்திரிசபை சிபார்சு

கொழும்பு, திங்கள் அந்நிய ... செலாவணிக்கு

# ஏழு நபர்களுக்கு ரூ. 2550 அபராதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக காரியாலய காரியாதி
காரி உட்படப் பலர் கல
ந்துகொண்டனர்

இந்த முறை நாகபூஷணி அம்பாள் தேர், தீர்த்த வருடாந்த உற்சவத்துடன், சிங்கள மக்களது 'பொசன்' பண்டிகையும் வருவதால். பெருந்தொகையான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது

அண்மையில் நடந்த பாலைதீவு படகு விபத்து சுட்டிக்காட்டப்பட்டு நயினுதீவுக்கு யாத்திரைக்குப் போக்குவரத்துச் செய்யும் விடயம் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டுமென எச்சரிக்கப்பட்டது

குறிக்காட்டுவானிலிருந்து ஆலயத்துக்குச் சுலபமாகச் செல்லலாமென்றும் 10நிமிடங்களில் வள்ளத்தில் போய்ச்சேரலாமென்றும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்க லோஞ்சுகள் யந்திர வள்ளங்கள் 17. 18, 19-ம் பிரயாணம் செய்தால் விபத்துக்கள் தவிர்க்கப்படலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

அதிகமாக யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதைத் தடுக்கப் பொலிஸ் பகுதியார் சகல துறைகளிலும் காவல் செய்வார்கள் இராணுவத்தினரும் கடற்படையினரும் இரவு நேரத்தில் யாத்திரை செய்வோரை கண்காணிப்பதுடன் போதிய காவலாக இருப்பார்கள் இறுப்பிட்டித் துறைமுகத்தில் இருந்து நயினுதீவுபோக சுமார் 45 நிமிடங்களாகும் இதனுல் புதிய குறிக்கட்டுவான் குறுகியபாதையையே இவ்வாண்டு யாத்திரிகர்கள் பயன்படுத்தலாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது

சிங்களயாத்திரிகர் யாழ். நாகவிகாராவிலும், சிங்கள மகாவித்தியாலயத்திலும் தங்கியாத்திரை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குவிம

# ஆராய ரேயல் கமிஷன்!
## நியமிக்கவேண்டுமென
## மந்திரிசபை சிபார்சு

கொழும்பு, திங்கள்

'லேக்கவுஸ்' பத்திரிகை ஸ்தாபனம் வெளிநாட்டு நாணய மாற்றுக் கட்டுப்பாட்டை மீறியுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ரேயல் கமிஷன் ஒன்றை நியமிக்கும்படி கவர்னர் ஜெனரலிடம் சிபார்சு செய்வதென்று கூட்டரசு மந்திரி சபை தீர்மானித்துள்ளது.

1960 ஜூலை முதல் 1969 ஆகஸ்ட்வரையிலான இடைப்பட்டகாலத்தில் லேக்கவுஸ் பத்திரிகை ஸ்தாபனமோ, அன்றி அதனுடன் தொடர்பான நிறுவனங்களோ, டைரக்டர்களோ நிறுவனத்துக்குச் சொந்தமான பணத்தை அல்லது சேரவேண்டிய பணத்தை அந்நிய செலாவணிக்கு மாறுகவோ, கையாடியிருக்கிருர்கள் என்பதைப் பற்றி அன்றி வருமானவரிக்கட்டுப் பாட்டுக்கு மாறுகவோ ரேயல் கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டுமென்பதே மந்திரிசபையின் தீர்மானமாகும்.

### சுகததாசா மீதான விசாரணை

முன்னுள் தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாமீதுசென்ற அரசாங்க காலத்தில் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி தொடர்ந்துவிசாரணைகள் நடாத்தப்படவேண்டுமென்றும் மந்திரிசபை முடிவு எடுத்துக்கொண்டது.

# ஏழு நபர்களுக்கு ரூ. 2550 அபராதம்
## கள்ளக்கடத்தலில் ஈடுபட்டார்களாம்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை கடலில் வைத்து சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களை கைப்பற்றியதுடன் ஏழு நபர்களையும் கைதுசெய்து அவர்களுக்கு சுங்கப்பகுதியினர் 2550 ரூபாய் அபராதமும் விதித்துள்ளனர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது.- பருத்தித்துறைக் கடற்கரையில் திக்கம்என்ற இடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற கள்ளக்கடத்தல் படகொன்றை பருத்தித்துறை சுங்கப்பகுதியைச் சேர்ந்த உதவிச் சுங்கத் தடுப்பதிகாரியான திரு எதிரிசிங்கா தலைமையில் சென்ற சுங்கக் கோஷ்டியினர் ஆழ்கடலில் வைத்துக் கைப்பற்றினுர்கள். சுங்கப் பகுதியினர் தாங்கள் செல்ல ஏற்கனவே கள்ளக்கடத்தல் காரர்களிடமிருந்து கைப்பற்றிய ஓர் இயந்திரப் படகைப் பாவித்தார்களாம்.

கள்ளக்கடத்தல் படகில் ஏழுநபர்களும் சுமார் ஐம்பதிஞயிரம் ரூபாய் பெறுமதியான கராம்பு, சாதிக்காய்பூ, நைலோன் நூல் சககரின் முதலியனவும் காணப்பட்டனவாம்

கைப்பற்றப்பட்ட பொருட்களும் கைது செய்யப்பட்ட நபர்களும் படகும் யாழ்ப்பாணம் கச்சேரியைச் சேர்ந்த காரியாலய உதவியாளரும் வடபகுதி உதவி சுங்கக் கலக்டருமான திரு கே. கந்தசாமி முன் ஆஜர் செய்யப்பட்டன. இது சம்பந்தமாக விசாரணை செய்த திரு கந்தசாமி கைப்பற்றப்பட்ட ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் நாற்பதிஞயிரம் ரூபாய் பெறுமதியான இயந்திரப்படகையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டதுடன் கைப்பற்றப்பட்ட படகின் தண்டேலுக்கு எழுநூற்றி ஐம்பது ரூபாய் அபராதமும் படகிலிருந்த மற்ற ஆறு நபர்களுக்கும் தலாமுந்நூறு ரூபாய் அபராதமும் விதித்தார்.

எனவும் கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கூப்பனுக்கு இரண்டு கொத்து அரிசி தருவதாகச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற இவ்விதம் செய்யவேண்டியுள்ளது.

7 கோடி புசல்நெல் உற்பத்தியாவதாகவும், 1கோடி 90 லட்சம் புசல் நெல்லே கொள்வனவு செய்யப்பட்டதாக புள்ளிவிபரங்களிலிருந்து அறியவருவதனுல், உற்பத்தி செய்யப்படும் நெல் முழுவதையும்வாங்குவதற்கு

## பிரதமர் துங்கு இங்கு தங்கிச் செல்வார்

கொழும்பு, செவ்

மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மான் லண்டனுக்குப் போகும் வழியில் இன்று சர்வதேச விமானநிலையமான கட்டுநாயகா விமான நிலையத்தில் தங்கிச் செல்வார்.

# 18 வருடமாக தேடப்பட்ட ஆசாமி அகப்பட்டார்!

யாழ்ப்பாணம், செவ்

பதினெட்டு வருடகாலம் பொலிசாரால் தேடப்பட்டு வந்த ஆசாமி அகப்பட்டார் மாதம் ஒரு முறை பொலிஸ் நிலையத்தில் கையெழுத்துப் போடவேண்டியவர் அத்துடன் பல திருட்டுகளில் சம்பந்தப்பட்டவரென சந்தேகத்தின் பேரில் வடபகுதியிலுள்ள பல பொலிஸ் நிலையங்களால் வல்லிபுரம் கந்தசாமி என்ற இந்நபர் தேடப்பட்டுவந்தார்

யாழ்ப்பாணம் பாரதூரமான குற்றப்பிரிவைச் சேர்ந்த திரு. என் ஈ இரத்தினம் ஆசாமியைக் கைது செய்து யாழ் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்செய்த போது, இம்மாதம் 21-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார் (குவிம)

# வடக்கு கிழக்கில் நீதிமன்ற மொழியில் மாற்றமில்லை!

கோட்டை, திங்கள்

வடககு, கிழக்கிலுள்ள நீதிமன்ற மொழிகளில எவ்வித மாற்றமும் இருக்க மாட்டாது

தென்னிலங்கையிலுள்ள பத்து மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலும் கொழும்பில் மூன்று நீதிமன்றத்திலும் மட்டும் சிங்கள மொழியில் நிர்வாகம் நடைபெறுமென நம்பகமான தகவல்கள்தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள நீதிமன்றங்கள் உட்பட தென்னிலங்கையிலுள்ள அநேகமான நீதிமன்றங்களில் மொழி சம்பந்தமாக எவ்வித மாற்றங்களும் நிகழமாட்டாதென்றும் வழமைபோல் நடவடிக்கைகள் இருக்குமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன

# அரசியல் நிர்ணய சபையாக மாறும்!

கொழும்பு, திங்கள்

ஆட்சிமன்றம் ஜூலை முதல் வாரத்தில் அரசியல் நிர்ணயசபையாக மாறுகிறது

அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதற்கான பிரேரணையை அமைச்சர் திரு. கொல்வின் ஆர் டி சில்வா ஜூலை முதல் வாரத்தில் ஆட்சிமன்றம் கூடும் போதுகொண்டுவருவார்

# சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, திங்கள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 303-வது சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

### முதலாவது பரிசு

15 B 0346 ரூ 73,220

### இரண்டாவது பரிசு

11 L 0763 ரூ 29,288

### மூன்றுவது பரிசு

13 Z 0386 ரூ 7,322

தலா ரூபா 366,10 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள்வருமாறு:-

| | |
|---|---|
| 12 H 0483 | 23 A 0172 |
| 28 F 0117 | 26 C 0052 |
| 31 F 0416 | 29 J 0105 |
| 04 Y 0969 | 12 K 0264 |
| 02 T 0261 | 14 X 0071 |
| 28 Q 0553 | 18 K 0156 |
| 29 S 0155 | 13 S 0339 |
| 24 O 0785 | 40 H 0222 |
| 10 U 0789 | 19 T 0191 |
| 09 E 0605 | 06 G 0045 |
| 27 U 0274 | 10 M 0313 |
| 29 F 0463 | 16 A 0697 |
| 03 N 0121 | 27 A 0700 |
| 22 K 0259 | 21 T 0157 |
| 19 X 0176 | 24 A 0628 |
| 29 W 0139 | 17 F 0290 |
| 10 Q 0601 | 12 T 0907 |
| 15 R 0035 | 24 O 0486 |
| 02 X 0517 | 16 W 0591 |
| 09 T 0231 | 11 A 0300 |
| 05 E 0668 | 20 E 0811 |

| | |
|---|---|
| 10 A 0900 | 06 N 0242 |
| 12 D 0264 | 17 V 0979 |
| 14 X 0572 | 29 L 0042 |
| 19 S 0626 | 08 L 0201 |
| 20 E 0662 | 11 J 0381 |
| 31 A 0940 | 21 C 0812 |
| 02 A 0683 | 16 Y 0739 |
| 02 H 0876 | 19 C 0848 |
| 18 R 0826 | 22 A 0363 |
| 14 D 0634 | 04 Q 0729 |
| 02 W 0838 | 21 T 0311 |
| 31 Y 0264 | 03 Q 0701 |
| 40 H 0591 | 20 J 0026 |
| 17 N 0506 | 07 R 0968 |
| 25 Z 0665 | 03 [illegible] 0680 |
| 04 C 0150 | 10 C 0521 |
| 21 V 0849 | 30 Z 0576 |
| 32 L 0386 | 07 P 0874 |
| 09 T 0047 | 27 Q 0162 |
| 31 E 0848 | 01 F 0354 |
| 23 H 0298 | 15 V 0158 |
| 31 A 0141 | 10 H 0363 |
| 13 V 0643 | 23 T 0676 |
| 27 A 0852 | 05 K 0689 |
| 04 V 0082 | 18 F 0947 |
| 40 M 0066 | 03 O 0148 |
| 13 V 0057 | 31 T 0496 |
| 11 W 0448 | 23 P 0809 |
| 18 S 0552 | 26 S 0822 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

### ஜெமினி 7 சாதனையை
# சோயுஸ்-9 முறியடிக்கும்

மாஸ்கோ, ஜூன் 16

சோயுஸ்-9 கலத்தில் பூமியைச் சுற்றி வரும் சோவியத் விண்வெளி வீரர்கள் இருவரும் விண்வெளியில் அதிக நேரம் சஞ்சாரம்செய்த மனிதர்கள் என்ற புகழை அடையவிருக்கிருர்கள்.

இன்று முழுவதும் அவர்கள் விண்வெளியில் சஞ்சாரம்செய்தார்களானுல் 1965-ம் ஆண்டில் ஜெமினி-7 கலத்தில் அதிகநேரம் விண்வெளியில் சஞ்சாரம் செய்த அமெரிக்க வீரர்களின் சாதனையை முறியடித்து விடுவார்கள். ஜெமினி வீரர்கள் 13 நாள் விண்வெளியில் சஞ்சாரம் செய்ததுடன் பூமியை 206 தடவைகள் வலம் வந்தார்கள்

சோவியத் வீரர்கள் இருவரும் ஜூன் முதலாம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர். இதுவரை சுமார் 200 தடவைகள் பூமியைச் சுற்றியிருப்பதுடன் 50 லட்சம் மைல் பிரயாணம் செய்திருக்கிருர்கள்,


## அடைவு நகைகள் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் 1-3-69க்கு முன்பாக அடைவு வைத்து இதுவரையும் மீட்கப்படாமல் இருக்கும் நகைகள்யாவும் 27-6-70 சனிக்கிழமை காலை 10மணிதொடக்கம், மேற்படி வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

முகாமையாளர்,
யா. கூ. மா. வங்கி,
சாவகச்சேரிக்கிளை.

2296



'ஈழநாடு'

# தேர்தல் போட்டி 1970

## பரிசுபெறுவோர் விபரம்:

1-ம் பரிசு: திரு. ச. நவரத்தினவேல்
'வேல்பதி', புத்தூர்.

2-ம் பரிசு: செல்வி வ.சோதி நாகரத்தினம்
கீரிமலை, காங்கேசன்துறை.

3-ம் பரிசு: திரு. என். இராமநாதன்
'சுவர்ணகிரி', தலையாளி, யாழ்ப்பாணம்.

## 5 ஆறுதல் பரிசுகள்:

1. ஸ்ரீ நா. ஹேமாவதி
'கலைமகள்நிலையம்', முள்ளியவளை.
2. திரு. எம். ஏ. எம். கமால்
75, நாவாந்துறை வீதி, யாழ்ப்பாணம்.
3. திரு. பா. யேசுதாசராசன்
சங்கத்தானை, சாவகச்சேரி.
4. திரு. ஏ. எஸ். வஸ்தியாம்பிள்ளை
7, விதானையார் வீதி, சுண்டிக்குளி.
5. திரு செ. சின்னத்துரை
இடைக்காடு, அச்சுவேலி.

பரிசு பெறுவோர் அவரவருக்குரிய பரிசுகளை 22-6-70 பி. ப. 4 மணிக்கு எமது காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

பரிசு பெறுவோருக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள

★ கொழும்பு ஸ்ருடியோ
★ நியூரோன் எலக்றிக்கல்ஸ்
★ நொதேன் இண்டஸ்றீஸ்

ஆகிய மூன்று ஸ்தாபனங்களும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளையும்

கே. கே எஸ். வீதியிலுள்ள

தம்பி அன் கோ
மில்க்வைற் சோப் தொழிற்சாலை

ஆகிய ஸ்தாபனங்கள் ஆறுதற் பரிசுகளையும் மனமுவந்து அளிக்க முன்வந்திருக்கிருர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்புலவர் சங்கம் நடத்திய நாடகப்போட்டி

மாவிட்டபுரம், திங்கள்

யாழ். மாவட்ட கலாமன்றங்களிடையே அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்திய சைவசமய நாடக விழாவில் இணுவில் இசை நடன கிராமிய கலைக்கல்லூரியினரின் 'வாதவூர் வள்ளல்' என்ற நாடகம் முதலிடம் பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டியில் கீரிமலை உதயசூரியன் நாடக மன்றத்தின் 'சிவபக்தன்' என்ற நாடகம் 2ம் இடத்தையும், தெல்லிப்பழை கலாரஞ்சனசபாவின் 'சிறுத்தொண்டர்' நாடகம் 3-ம் இடத்தையும்பெற்றன.

சிறந்த நடிகர்களாக திரு. எஸ். சுப்பிரமணியசர்மா (கீரிமலை உதயசூரியன்நாடக மன்றம்), என். கந்தசாமி (இணுவில் இசை நடன கிராமிய கலைக் கல்லூரி), என். வடிவேலு (ரஸிக ரஞ்சன சபா) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியில் இடம் பெற்ற நாடகங்கள் யாவும் சைவசமய சித்தாந்தத்தை விளக்கும் வகையில் அமைந்திருந்தன.

இவ்விழாவில் நாடகத்தின் நடுவர்களாக காங்கேசன்துறை வட்டார கல்வியதிகாரி கே. சோமசுந்தரம் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு தேவன், யாழ் இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் கந்தவனம் ஆகியோர் கடமையாற்றியுள்ளார்கள்.

## கற்களை விற்பதிலும் தரகு

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த பல ஆண்டுகளாக அடிக்கடி மழை பெய்து வெள்ளம் போ[illegible]தினால் சரசாலை நுணாவில் வேலக்கேணி மருதடி ஆகிய இடங்களில் மண்வீடுகள்பல சேதமடைந்துள்ளன.

மண் ஓலைவீடுகளை மாற்றிகல் வீடு கட்ட மக்கள் இப்பொழுது ஏற்பாடு செய்துள்ளார்கள் பெருந்தொகையாக வீடுகளைக் கட்டுவதற்குரிய கற்களை கைதடி நாவற்குளி வேம்பிராய் அச்செழு புத்தூர் சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வருகின்றனர் கற்களைத் தரம் செய்து நாளொரு விலையாக தரகர்கள் விற்கின்றார்கள் இதனால் சாதாரண மக்கள் நடுத்தர வீடு கட்டுவதில் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். லொறிகளிலும் உழவுயந்திரங்களிலும் எடுக்கப்படும் கற்கள் தனிப்பட்டோர் கையில் சிக்சி அதிக விலைக்குப் போகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 16—6—70**

(செய்திகள்: காலை 6 45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை. 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 41 மீ.**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீ அன்ட் 61 மீ.**

மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-10 முத்திநெறி, 6-15 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி.

## சமயக் கல்வியின் அவசியம்

பண்டத்தரிப்பு, திங்கள்

'இன்றைய நாளில்சமயக் கல்வி பிள்ளைகளுக்கு அதிகம் வேண்டப்படுகிறது. இறைவனை அறிந்து அவருடன் உறவாட சமயக்கல்வியே உறுதுணை புரிகிறது என இளவாலை சென்ஜேம்ஸ் கட்டளைக்குரவர் வண. லூயிஸ்டெய்சி தமது பங்கு மக்களுக்கு விடுத்தசெய்தியில் கூறியுள்ளார்.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த

பெண்ணை வாழ விடுங்கள்

உலக உதைபந்தாட்டம்:

# மேற்கு ஜெர்மனியிடம் இங்கிலாந்து தோல்வி

மெக்ஸிக்கோ, ஜூன்15

மெக்ஸிக்கோவில் நடைபெறும் 'உலக உதைபந்தாட்டக் கிண்ணத்துக்கான' சுற்றுப் போட்டியின் 'கால் அரை' இறுதிப் போட்டியில், இதுவரை ''உலக சாம்பியன்'' பட்டத்தை வகித்து வந்த இங்கிலாந்துக் கோஷ்டி தோல்வியடைந்தது.

1966-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலக உதைபந்தாட்டப் போட்டியின், இறுதி சாம்பியன் ஆட்டத்தில் கலந்து கொண்ட இங்கிலாந்துக் கோஷ்டி தன்னை எதிர்த்து விளையாடிய மேற்கு ஜெர்மனியை 4-2 கோல்களால் தோற்கடித்து, உலக சாம்பியன் பட்டத்தை முதல் முறையாக இங்கிலாந்துக் கோஷ்டி பெற்றது. இதே ஆட்டத்தின் போது, இரு கோஷ்டிகளும் ஆட்ட முடிவில் 2-2 கோல்களைப் பெற்றிருந்தது. பின் கொடுக்கப்பட்ட மேலதிக 10 நிமிட நேரத்தின் போதுதான், இங்கிலாந்துக் கோஷ்டி மேலும் 2 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றிருந்தது.

இதே போல்தான், இம்முறையும் இங்கிலாந்தும், மேற்கு ஜெர்மனியும் மோதிய ஆட்டத்தின் போது, ஆட்டமுடிவில் இரு கோஷ்டிகளும் தலா 2—2 கோல்களைப் பெற்றிருந்தது. இதன் பின் கொடுக்கப்பட்ட மேலதிக 10 நிமிடங்களின் போதுதான், மேற்கு ஜெர்மனி மேலும் ஒரு கோலைப் போட்டு, இங்கிலாந்துக் கோஷ்டியைத் தோற்கடித்து, 'அரை இறுதி'யாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

பிரேஸிலுக்கும் பேருவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், பிரேஸில் 4—2 கோல்களால் வெற்றி பெற்று, 'அரை இறுதி'யாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது

இற்றலிக்கும், மெக்ஸிக்கோவுக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில் இற்றலி 1—0 கோல்களால் வெற்றி பெற்று, 'அரை இறுதி' யாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

உருகுவேக்கும், சோவியத் யூனியனுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் உருகுவே வெற்றி பெற்று, 'அரை இறுதி'ப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது

'அரை இறுதி'ப் போட்டிக்கு தகுதி பெற்ற கோஷ்டிகளின் ஆட்டங்களின் விபரம் வருமாறு:

பிரேஸில் எதிர் உருகுவே.

மேற்கு ஜெர்மனி எதிர் இற்றலி.

'அரை இறுதிப் போட்டி' இம்மாதம் 17-ம் திகதி நடைபெறும். (தே நி)

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 2-ம் திகதி [16-6-70]

**மேஷம்-** இன்பத்தின் அணைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும். பெற்றோர் ஆதரவும் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்-** சூழ்ச்சியின் உச்சக் கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண்வைப்பீர்.

**மிதுனம்-** இலட்சியப் பாதையில் வெற்றிநடை போடுவீர். பதவிஉயர்வுக்கும் இடமுண்டு.

**சிம்மம்-** இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும். முன்னேற்றமான தினம்.

**கன்னி-** வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு வாகன இலாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**துலாம்-** துன்பத்தின் ரேகைகள் நிழலாட்டம் போடும். பணமும் பெருமளவில் செலவாகும்.

**விருச்சிகம்-** அவசர முடிவினால் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும். பூமிப் பிணக்கைத் தவிர்க்கவும்.

**தனுசு-** வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருக வைக்கும்.

**மகரம்-** வெளியிடத்துப் [illegible]

# மாவை கந்தன் கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம், திங்கள்

சரித்திரப்பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகம் நேற்று அதிகாலை பக்தி சிரத்தையுடன் சிறப்பாக நடைபெற்றது.

சென்ற 8ம்திகதி கும்பாபிஷேக கிரியைகள், பிரமஸ்ரீ சு. துரைச்சாமி குருக்கள், பிரமஸ்ரீ து சண்முகநாத குருக்கள், பிரமஸ்ரீ ஐ வைத்தியநாதகுருக்கள், பிரமஸ்ரீ. கு. நகுலேஸ்வராக்குருக்கள் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தன.

நேற்று காலை காங்கேய மூர்த்திவள்ளி, தெய்வானை சமேதராக மூலஸ்தானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஷ்டபந்தன மருந்து சாத்தப்பட்டதையடுத்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் எண்[illegible]ய்க்காப்பு சாத்தி தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

இன்று (ஞாயிற்றுகிழமை) காலை 5.45 தொடக்கம் 6.45க்கும் இடையில் உள்ள சுப நேரத்தில் கும்பாபிஷேகம் அதிசிறப்பாக நடைபெற்றது.

இதையடுத்து 12 மணியளவில் மகா அபிஷேகமும், இரவு திருக்கல்யாண உற்சவமும் நடை பெற்றன.

கும்பாபிஷேக நேரத்தில் ஆலயப் பிரவேசம் மேற்கொள்ளபபடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆலயப் பிரவேசம் மேற்கொளப் படவில்லை. பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. மேற்கு, கிழக்கு வாசல் கதவுகள் திறந்த வண்ணமே இருந்தன.

இந்து ஆலயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் போராட்டத்தை இனி எதிர் நோக்குவோம்

பத்தேகம, திங்கள்

'எமது அரசியல் போராட்டம் முடிவடைந்து விட்டது. இனிமேல் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் போராட்டம் ஒன்று எம்மை எதிர்நோக்கியிருக்கிறது. அப் போராட்டத்திலும் நாம் எல்லோரும் இன, மத, அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு ஈடுபட வேண்டும்.'

எலிப்பிட்டியாவில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது உரையாற்றிய தோட்டத் தொழில் உதவி அமைச்சர் திரு அல்பேட் காரியவாசம் மேற்கண்டவாறு கூறினார்,

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய முன்னணி ஜனநாயகத்தை பேணுவது என்பதை மக்கள் நன்கு அறிவர். நாட்டின் நிதிநிலைமை மிகமோசமான நிலையில் இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்கப் பொதுமக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

# இரத்தம் வடிய வேலிக்கருகில் இருவரும் கிடந்தனர்

## சரவணை பஸ் விபத்து வழக்கில் சாட்சியம்

ஊர்காவற்றுறை, திங்கள்

மாசிமாதம் 15-ந் திகதி சரவணை வீதியால் சென்று கொண்டிருந்தேன். இறந்தவர் எனக்கு முன்னதாக நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது பஸ் ஒன்று வரும் சத்தத்தை நான் கேட்டேன். நான் றோட்டின் ஒரத்திற்குச் சென்றேன் பஸ் வண்டி அபரிதமான வேகத்தில் வந்துகொண்டிருந்தது. பஸ் என்னைக் கடந்து சென்றதும் யாரோ ஒருவர் பஸ்ஸினால் அடிக்கப்படும் சத்தத்தைக் கேட்டேன். இறந்த இரண்டு மனிதர்களும் இரத்தம் வடிய வேலிக்கருகில் கிடந்தனர்.

சரவணை பஸ் விபத்து வழக்கின் சாட்சியான சரவணையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா மேற்படி வழக்கு விசாரணையின் போது மேற்கண்டவாறுகூறினார். இவ்வழக்கில் சாவகச்சேரியைச் சேர்ந்தபஸ்டிரைவர் சாரதி செல்லத்துரை மகாதேவாவின்மீது கவலையீனமாகவும், அபரிதமான வேகத்துடனும் பஸ் ஓட்டியதாகவும் இதன்காரணமாக சரவணையைச் சேர்ந்த சந்தியன் வைத்தியன் அல்லது பஸ்தியாம்பிள்ளை என்பவரையும், கார்த்திகேசு வைத்திலிங்கம் என்பவரையும் கொலை செய்ததாகவும் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது நீதவான் திரு. ஜே. ஜே எவ் ஏ. டயஸ் முன்னிலையில் திரு. இராசையா தொடர்ந்து கூறியதாவது:

சம்பவம் நடந்தபோது மழை தூற்றலோ அல்லது மழையோ இல்லை வீதி மிகவும் நன்றாக இருந்தது இரண்டு மனிதர்களும் விழுந்தவுடன் பஸ் நிற்கவில்லை. சில யார் தூரம் சென்ற பின்பே நின்றது. பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் ஓடிவந்து என்ன நடந்தது என்று கேட்டார்கள் நான் அவர்களுக்கு நடந்ததைச் சொன்னபின் பொலிசாருக்கும் அன்று ஒரு முறைப்பாடு கொடுத்தேன்

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சார்ள்ஸ் வி[illegible]யராசா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

இறந்தவர்களின் உடல்களை நான் பிரேதபரிசோதனை செய்தேன். இறந்தவர்களான வைத்திலிங்கம், வைத்தியன் ஆகியோரின் உடம்பில் முறையே ஏழு எட்டு காயங்கள் இருந்தன. எலும்பு முறிவினாலும், கல்லீரல, மண்டையோடு, மூளை ஆகியவற்றில் உண்டான காயங்களினாலும் ஏற்பட்ட அதிர்ச்சியும்இரத்தப்பெருக்குமே மரணத்துக்குக்காரணமாகும்.

புறக்டர் ஜிம்மிராசரத்தினம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இராசையாவின் உதவியுடன்வழக்கை நடத்தினா. எதிரி தரப்பில் புறக்டர் ஆர் விஸ்வநாதனுடன் அட்வகேட் வி.என். நவரத்தினம் ஆஜரானார். நீதவான் வழக்கை இம்மாதம் 17ந்திகதி விசாரணைக்காக ஒத்திவைத்தார்.

— —

## விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டியும், தேவரையாளி இந்துக்கல்லூரிப் போட்டியும் இம்மாதம் 25ந் திகதி நடைபெறவிருக்கின்றன. பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் போட்டிகள் அடுத்த மாதம் முதற் கிழமையளவில் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

பண்டத்தரிப்பு, திங்கள்

இளவாலை என்றியரசர் கல்லூரி விளையாட்டுப் போட்டி மிக அமைதியான முறையில் நடைபெற்றது. பாடசாலைக் கொடியோ அன்றி இல்லங்களின் கொடிகளோ ஏற்றிவைக்கப்படவில்லை. அண்மையில் காலமான ஆசிரியர் திரு. வி, கந்தையாவின் மறைவையொட்டியே இந்தவகையில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் எமிலியானுஸ் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், முறையே ஜீவரத்தினம், தேவசகாயம் இல்லங்கள் இரண்டாம், மூன்றும் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

நெல்லியடி விரைவில்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா நாகேஷ்—வி கே. ராமசாமி நடித்த
**பெண்ணை வாழ விடுங்கள்**

இன்று மட்டும்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சி
எம்: ஜி: ஆர். பத்மினி நடித்த
**மன்னாதி மன்னன்**
(புதிய கொப்பி)

நாளை முதல்
(தினசரி 4 காட்சிகள்)
ஜெய்சங்கர்—தேவிகா
நடித்த
**தெய்வீக உறவு**

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மா லை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த




விஞல் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும். பூமிப் பிணக்கைத் தவிர்க்கவும்.

**தனுசு**- வெள்ளிப்பணம் தொடர்புகளை பெருக வைக்கும்.

**மகரம்**- வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று

**கும்பம்**- இதயத்தை தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடுசெய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**மீனம்**- கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசித புத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
பி. எஸ். வீரப்பா—ஜானகி
நடித்த
**சவுக்கடி சந்திரகாந்தா**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
**குல விளக்கு**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Poya, Pre-poya 4 Shows
Manoj Kumar
Waheeda Rehman
in
PATHAR KE SANAM
(Eastman color-Hindi)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya-Pre Poya 10.30 a.m.
Sandy Dennis, Keiro Dul'ea
in
THE FOX
Symbol of the mole
(Adults only-color)

**REGAL** JAFFNA
Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Robert Toylor
Kallie Brownie
in
HONDO & THE APACHES

ஜனங்கான பக்தர்கள் எண் ... ய்க்காப்பு சாத்தி தமது ... இருந்தன.

இந்து ஆலயங்கள்

# அட்டமி நவமியில் கொடியேறுவது ஏன்?

## விளக்கம் தருகிறுர் பன்மொழி புலவர் பி. ஜஞர்த்தனம்

உடுப்பிட்டி, திங்கள்

இந்து ஆலயங்கள் அட்டமி நவமி தினங்களில் கொடியேறுவது ஏன்? இதற்கு கரவெட்டி மேற்கு தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து இராமாயண விரிவுரையாற்றிவரும் திருவனந்தபுரம் பன்மொழிப் புலவர் திரு. ஜஞர்த்தனம்பிள்ளை விளக்கம் தெரிவித்தார்.

அவர் தனது விரிவுரையில் கூறியதாவது.

"பொதுமக்கள் அட்டமி, நவமியை ஒதுக்கிவைக்கின்றுர்கள். கடவுளால் படைக்கப்பட்ட இவ்விரண்டையும் மக்கள் ஒதுக்கிவைத்ததை விரும்பாத ஆண்டவன் அட்டமி, நவமி தினங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக இவ்விரு தினங்களிலுமே ஆலய உற்சவங்கள் கொடியேற அருள் பாலித்தார்.

எனவே ஆண்டவனுல் படைக்கப்பட்ட எவையும் ஒதுக்கக் கூடியவையல்ல. அதேபோல் மக்களும் ஒதுக்கக்கூடியவர்கள் அல்ல,

கம்பராமாயணகாலத்தில் இராம இராச்சியம் நடந்தது என்றுல் அப்பொழுது முக்கியமான பிரச்னைகளாகிய உணவு, உடை வீட்டுப் பிரச்னைகள் அடியோடு அகற்றப்பட்டு இருந்தன. அதனுல் இப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் இராமராச்சியத்திற்கு எதுவித சிரத்தையும் ஏற்படவில்லை

ஆனுல் இக்காலத்தில் மக்களிடம் சென்று கேட்டால் பல பிரச்னைகள், உணவு, உடை, தொழிற் பிரச்னைகள் போன்றவற்றுடு கதவடைப்புப்பிரச்னையும் இருப்பதும் தெரிய வருகின்றது.

## எம். சிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆட்சி மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி சுன்னுகம் ஏழாலை தெற்கு ஸ்ரீ முருகன் கிராம முன்னேற்றச் சங்கம் வாழ்த்துச் செய்தியொன்றை அவருக்கு அனுப்பியுள்ளது

பல வருடங்களாக ஈழத்து நாடாளுமன்றத்தில் நமது சமூகத்தவர் ஒருவரின் குரல் ஒலிக்காத குறையைத் தங்கள் நியமனம் போக்கிவிட்டது. சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் நீண்டகாலத் தலைவராக இருந்து எமது சமூகத்தின் நலனுக்காகத் தாங்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற சேவைபோல் நாடாளுமன்றத்திலும் எமதுகுறைகளைப் போக்கக் குரலெழுப்பி நாமும் மனிதர்களென்ற உரிமையோடு நடமாட வழிபிறக்கச் செய்ய அயராது உழைப்பீர்களென்ற நம்பிக்கையில் ஏழாலை தெற்குவாழ் சிறுபான்மைத் தமிழர்களின் சுபீட்சத்திற்காகப் பணிபுரியும் எமது சங்கம் தனது ஒத்துழைப்பைத் தங்களுக்கு என்றும் நல்க நாடியவண்ணமிருக்கின்றது. என்று அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## தொழிலாளருக்கே அதிகமாகத் தெரியும்

கோட்டை, திங்கள்

எனக்கு தெரிந்ததிலும் பார்க்க தொழிலாளர்களுக்கு தங்களுடைய வேலையைப்பற்றி அதிகம்தெரியும். என்னுல் இயலக்கூடியதிறமையைக் கொண்டு நான் செய்யமுயலும் பணிக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் தரும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இவ்வாறு மொறட்டுவ. கட்டுப்பெத்த வீடமைப்புத்திட்டத்தைப் பார்வையிட்ட வீடமைப்பு மந்திரி திரு பீட்டர் கெனமன் கூறினுர்

திரு கெனமன் மேலும் கூறியதாவது:- குறையிலுள்ள 69-70ம் ஆண்டிற்கான திட்டத்தைமுடிக்க இன்னும் 20லட்சரூபா தேவை. 3000 தொழிலாளர்களுக்கு ஒரு குடியிருப்புத் திட்டத்தை எமது அரசாங்கம் உடனடியாக அமுல்செய்யும் மக்களுக்குஎங்களுடைய அரசாங்கத்தால்தான் நன்மைசெய்ய முடியும்.

பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது நீதவான் திரு. ஜே. ஜே

## நெல்லியடி விரைவில் ஒளிமயமாகும்

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடிப் பட்டின சபைக்குட்பட்ட பகுதிக்கு அடுத்த மாதம் 1-ம்திகதியிலிருந்து மின்சாரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது, கோவில்கள் சனசமூகநிலையங்கள் வர்த்தக நிறுவனங்கள் மற்றும்பொது விடங்களில் மின்சார வெளிச்சம் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு விட்டன. அத்துளு தண்ணிர் திட்டப்பகுதிக்கும் விசேட மின்விளககுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## புதுவருட நிர்வாகிகள்

கொழும்பு, திங்கள்

அகில இலங்கை அரசின் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. மு இரத்தினசிங்கம், உபதலைவர் திரு என். கே. கணபதிப்பிள்ளை திரு. அ. சுப்பிரமணியப் காரியதரிசி திரு பொ. ஏரம்பு, உபகாரியதரிசி திரு செ. குணசிங்கம் திரு வி பரமநாதன், தனுதிகாரி வீ. கே. தங்கராசா, உபதனுதிகாரி செல்வி சி. தையல் நாயகி,

நிர்வாகசபை உறுப்பினர் திரு மா, கந்தப்பு திரு ந. க. செல்லத்துரை, திரு க. மாணிக்கவாசகர், திரு ந ஐயாத்துரை திருமதி ச ஆறுமுகம், கணக்குப் பரிசோதகர்: திரு சு, தம்பிராசா.

0 0

யாழ்ப்பாணம், செவ்

சங்கத்தானை ஐக்கிய நாணய சங்க 38-ம் வருடாந்தக் கூட்டம் அரசடி வாசிகசாலை மண்டபத்தில் திரு. சி. முத்துவேலு தலைமையில் கூடியது.

புதுவருட உத்தியோகத்தர்களாக கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்:- திரு. சி முத்துவேலு, உப-தலைவர்கள்:- திரு சி. வேலுப்பிள்ளை, திரு. கு. திருச்சிற்றம்பலம், காரியதரிசி:- திரு. சு முருகேசு, தனுதிகாரி:- திரு. சு. சரவணமுத்து, ஏழுபேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(கு. வி. ம.)

யுடன்வழக்கை நடத்தினு. எதிரி தரப்பில் புறக்டர் ஆர் விஸ்வநாதனுடன் அட்வகேட் வி.என். நவரத்தினம் ஆஜரானுர். நீதவான் வழ

## ஆண்டு நிறைவு விழா

ஊாவடி, திங்கள்

திருநெல்வேலி கலாமன்ற இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் 14வது ஆண்டு நிறைவு விழா, திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

மன்ற மாணவிகளின் கூட்டுப் பாடலும், பண்டிதை சைவப் புலவர் திருமதி சௌபாக்கியவதி சுந்தரலிங்கத்தின் பேச்சும், திரு க. சிவபாலன், திரு. செ. இராசையா, திரு. இ. திருஞானசம்பந்தன் ஆகியோரின் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.

ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், முறையே ஜீவரத்தினம், தேவசகாயம் இல்லங்கள் இரண்டாம், மூன்றும் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

## பரிசளிப்பும் பெற்றேர்தின விழாவும்

மன்னுர், திங்கள்

இம்மாதம் 22ந் திகதி திருக்கேதீச்சர இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையில் பெற்றேர் தின விழாவும், பரிசளிப்பு விழாவும் நடைபெறவிருக்கின்றன.

இவ்வைபவத்துக்கு மன்னுர் பிரதம கல்வியதிகாரி திரு வே. நடராஜா தலைமை வகிப்பார். அரசாங்க உத்தியாகத்தர்கள் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.


**KALANILAYA CAMBRIC**
கலாநிலைய கேம்பிறிக்
**WRITING PADS**
'லெற்றர் பாட்ஸ்'
நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:
**ஈழநாடு'**
(வர்த்தக அச்சகப் பகுதி)
55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-
**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்**
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில்

## பஸ் நிலையமெங்கும் அமைச்சர்களின் படங்கள்

சாவகச்சேரி, செவ் மக்கள் வெற்றித் தினத்தையொட்டி சாவகச் சேரி பஸ் நிலையம் சிகப்பு நீல நிறக் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா, போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தன, இலங்கைப் போக்கு வரத்துச்சபைத் தலைவர் திரு. அனில்முனசிங்கா ஆகியோரின் படங்கள் பஸ்நிலையத்திற்கு முன்பாக ஒட்டப் பட்டிருந்தன.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர், பொலிஸ்நிலையம், கைசடி வயோதிபர் விடுதி ஆகியவற்றில் இலங்கை தேசியக்கொடி பறக்க விடப் பட்டிருந்தன.

ஆசிரியர்கள் சிலர் காலஞ் சென்ற பிரதமர் பண்டார நாயக்காவின் நீல நிற பட்ஜ் அணிந்திருந்தனர். பஸ்களும் சிகப்பு நீலநிற கொடிகளால் அலங்கரிக் கப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட் டப்பட்டிருந்தன.

## கைதிகள் நேற்றுப் பட்டினி இருந்து பணம் சேர்த்தனர்

கோட்டை, திங்கள் கொழும்பு, விளக்கமறியல் சிறைச்சாலையிலுள்ள சுமார் 500 கைதிகள் மக்கள் வெற்றித் தினத்தையொட்டி நேற்று மதியபோசனம் சாப்பிடாது, அதனுல் மிச்சப்படும் பணத்தை 'நாட்டைக்காக்கும் நிதி'க்கு வழங்கினர்.

விளக்கமறியல் கைதிகளின் இந்த முன்மாதிரிச் செயல் பாராட்டக்கூடியதென்றும், இது அவர்கள் தாமசுவ முன்வந்துசெய்யும் தியாகமென்றும் சிறைச்சாலை அதிபர் திரு. பீலிக்ஸ் இரத்நாயக்கா தெரிவித்தார்.

நாட்டைக்காக்கும் நிதிக்கு நன்கொடையாக மூன்றுநாள் சம்பளத்தை வழங்குவதற்கு இலங்கை இராணுவ வீரர்களும், அதிகாரிகளும் முடிவுசெய்துள்ளனர். இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலசெய்த சிபார்சைத் தொடர்ந்தே இம்முடிவு செய்யப்பட்டது.

அகில இலங்கை சாராயம், கள் தவறணையாளர் சங்கம் நாட்டைக்காக்கும் நிதிக்கு ஒருலட்சம் ரூபா வழங்குவதென தீர்மானித்துள்ளது. சங்க செயலாளர் திரு. ஏ ஜே திரேசா, இதனை பிரதமருக்கும் நிதிமந்திரிக்கும் அறிவித்துள்ளார்.

## விவசாயத்தை விரும்பாத வாலிபன் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ் விவசாயத்தை விரும்பாத 17வயது வாலிபன் நஞ்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஏழாலையில் நடந்துள்ளது.

ஏழாலையைச் சேர்ந்த இராசையா பவானந்தவின் மரணவிசாரணையின் போது மேற்கண்டவிபரம் தெரியவந்தது. மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ் சென்றவரின் தாயார் சின்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது சம்பவம் நடந்த தினம் நானும் மகனும் தோட்டத்திற்குச் சென்று பாத்திகட்டினேம். காலை நேரம் முழு

### கூப்பனபெற ..

கொழும்புத்துறை திங்கள் குடியிருப்பாளர்கள் தமது 25-வது தொடர் அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்திற்கான அட்டவணைப் பத்திரம் இது வரை கிடைக்கப் பெருதிருந்தால் உடனடியாக அவற்றைப் பெற்று பூர்த்தி செய்து அவ்வப்பகுதிக் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். அட்டவணைப் பத்திரம் பூர்த்தி செய்யப்படாது ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தைப் பெறுவதில் காலதாமதமும் சிரமங்களும் ஏற்படலாமென இராமசேவகர்கள் அறிவித்துள்ளனர்.

# ஜோர்டானில் கொந்தளிப்பு அடங்கி அமைதி திரும்புகின்றது

## வெளியார் திரும்பிச்செல்வதுபற்றி கொமாண்டோதலைவர் ஆச்சரியம்

அம்மான், ஜூன். 15 ஜோர்டானில் கொந்தளிப்பான நிலைமை அடங்கி இப்பொழுது மீண்டும் அமைதி ஏற்பட்டு வருகின்றது. என்ருலும் நேற்று ஆங்காங்கே துப்பாக்கி வெடி சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

மன்னர் ஹுசேன் நேற்று வானெலி மூலம் ராணுவத்தினருக்கு விடுத்த இரண்டாவது செய்தியொன்றில் அமைதியையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் காண்டார். ராணுவத்தின் பிரதம தளபதி என்ற முறையில் தமது கட்டளைகளை அவர்கள் ஏற்று ஒழுகவேண்டியதின் அவசியத்தை மன்னர் வலியுறுத்தினுர்.

பாலஸ்தீன கொமாண்டோ ஸ்தாபனங்களின் தலைவர் யாசர் அரபாட் நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஜோர்டானில் மீண்டும் அமைதி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்ருர். வெளிநாட்டவர்கள் வெளியேறிக் கொண்டிருப்பது குறித்து அவர் ஆச்சரியம் தெரிவித்தார். ஜோர்டான் நிலைமை குறித்து அமெரிக்காவை அவர் குற்றஞ்சாட்டினுர்.

ஜோர்டானில் அரசாங்கப்படைகளுக்கும் பாலஸ்தீனகொமாண்டோக்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள மேற்கு ஜெர்மன், பிரிட்டிஷ் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிருர்கள். இந்த நாடுகளின் தூதரகங்களை கொமாண்டோக்கள் அச்சுறுத்தியதைத் தொடர்ந்தே இவர்கள் வெளியேறத் தொடங்கினுர்கள்.

இன்று தொடக்கம் ஜோர்டான் கொமாண்டோக்கள் வெளிப்படையாக ஆயுதங்கள் கொண்டுபோக மாட்டார்கள் என்றும், இஸ்ரேலிய பிராந்தியத்துக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையைப் பயன்படுத்தி அமெரிக்கா தலையிடுவதற்கு முயற்சி எடுப்பதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. வில்லியம் ரோகர்ஸ் மறுத்திருக்கிருர். ஜோர்டானிலிருந்து அமெரிக்க பிரஜைகளைத் திருப்பியழைத்து வருவதற்கு அமெரிக்க விமானப் படை விமானம் ஒன்று தயாராய் இருப்பதாக முதலில் வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து அமெரிக்கத் தலையீடு பற்றிய குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப் பட்டன.

### நாஸர் அழைப்பு

இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் அரபுநாடுகள் எல்லாம் ஒன்றுபட வேண்டும் என்று எகிப்திய அதிபர் அப்துல் நாஸர் அறைகூவல் விடுத்திருக்கிருர்.

நேற்று இஸ்ரேலியர் ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தினுர்கள்.

### ஆபாச நடனமாடிய பெண்கள் கைது

சென்னை, ஜூன் 15 சென்னைமவுண்ட் வீதியில் உள்ள ''பால்ஸ் ரெஸ்ருரண்ட்'' ஹோட்டலில் ஆபாச நடனமாடிய ரபேகா, ஜோக்ரா ஆகிய இருபெண்களையும் பொலிசார் கைதுசெய்து எழும்பூர் மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர் படுத்தியபோது, அவர்கள் இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மாஜிஸ்திரேட் வழக்கு விசாரணையை இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அண்ணாவுக்கு

### மதுரையில் சிலை நிறுவப்படும்

சென்னை, ஜூன் 15 'மதுரையில் அண்ணாசிலை திறப்புவிழா திட்டமிட்டபடி நடைபெறும். அதில் எவ்வித மாற்றமுமில்லை சிலையைத்திறப்பதற்கு வழக்கறிஞர்கள் ஆதரவு தந்துள்ளார்கள்' என்று முதலமைச்சர் கருணநிதி நிருபர்களிடம் கூறினுர். அவர் மேலும் நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழ்நாடு அரசு செய்தித்துறை வெளியிடும் 7 பத்திரிகைகளையும் ஒருங்கிணைத்து மாதமிருமுறை 'தமிழ் அரசு' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளியிடப்படுமென்றும் அறநிலைய இலாகா வெளியிடும் திருக்கோயில் ஏடு தொடர்ந்துவெளிவருமென்றும் கூறினுர்.

### சுகாதார விழா

பண்டத்தரிப்பு, திங்கள் பண்டத்தரிப்புச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் சுகாதார வார விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கட்டிடத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு டாக்டர் அத்தனுசியார் தலைமை வகித்தார்

### பெண்களுக்கு தனி பஸ்

சென்னை, ஜூன் 15 இன்றுமுதல் சென்னையில் பெண்களுக்கு தனி பஸ் சேவையிலீடுபடுத்தப்படுகிறது 'சென்னை நகரத்தில் ஜன நெருக்கடி அதிகமாகவுள்ள நேரத்தில் பஸ்களில் ஏற பெண்களும் குழந்தைகளும் பெரும் இன்னல் அனுபவிக்கிருர்கள். இக்கஷ்டத்தை நீக்குமுகமாக சென்னையில் பெண்களுக்கென 12 பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன. அலுவலகங்களும் கல்விக்கூடங்களும் அதிகமாக உள்ள இடங்களை இணைக்கும் வகையில் இந்த பஸ்கள் விடப்படும். இந்தப் பன்னிரண்டு பஸ்களும் தினசரி 11 தரம் வெவ்வேறு பாதைகளில் சேவையிலீடுபடும்' என தமிழ்நாடு போக்குவரத்திலாகா டைரக்டர் பெல்லியப்பா பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

......

### சென்னை திரும்பினர்

சென்னை, ஜூன் 15 ரோம், பாரிஸ், லண்டன் முதலிய நகரங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து ஜெனிவாவில் உலகத் தொழிலாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் நாடு தொழில்நல அமைச்சர் வேழவேந்தன் இன்று சென்னை திரும்பினுர்.

### மாநில பொதுக்குழுக் கூட்டம்

சென்னை, ஜூன் 15 சென்னை எழும்பூரிலுள்ள சிந்துசதன் மண்டபத்தில்சுதந்திரக்கட்சிமாநில பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுதந்திரக்கட்சித் தலைவர் ராஜாஜியும் கலந்துகொண்டார். பஞ்சாயத்து தேர்தல் அரசியல் நிலைமைபற்றி இக் கூடடத்தில் ஆராயப்பட்டது.

### வருடாந்த உற்சவம்

தாவடி, ஞாயிறு 'திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் சென்ற 10-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 16-ந் திகதி தண்டிகை உற்சவமும், 19-ந் திகதி கேடக மஞ்சோற்சவமும்,

### ஆபாசப்படங்களை

## தணிக்கை செய்வதில் கடுமையாக இருப்பார்களாம்

சென்னை, ஜூன்15 ''கடந்த இரண்டு ஆண்டுகளில் தணிக்கைக்கு வந்த

படங்களை தணிக்கை செய்வதில் மிக்க விழிப்புடன் இருக்கவே ண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நாட்டின் நெருக்கடி தீர ஒத்துழைப்புத் தாருங்கள்'

கோட்டை, திங்கள் திருமதி ஸ்ரீமாமோ பண்டாரநாயக்காவால் தலைமை ஏற்று நடாத்தப்படும் மக்கள் அரசாங்கத்தின சிம்மாசனப்பிரசங்கம், பேச்சைக் குறைத்து உழைப்பைக் கூட்டும் உண்மையின் ஓர் அம்சமாக விளங்குகிறது என சிம்மாசனப் பிரசங்கத்தை செனட்சபையில் பிரேரித்துப்பேசுகையில் செனட்டர் டிக்சன் சில்வா கூறினுர்,

செனட்சபைத் தலைவர் செனட்டர் ஏ இரத்தினுயக்காவின் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. திரு. டிக்சன் சில்வாவினுல் பிரேரிக்கப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தை செனட்டர் டீ ஜி. வில்லியம் வழிமொழிந்தார்.

திரு. டிக்சன் சில்வா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, முன்னைய அரசாங்கங்களின் சிம்மாசனப் பிரசங்கங்களை மக்கள் அரசாங்கத்தின் சிம்மாசனப்பிரசங்கத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மக்கள் அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கம் ஏழை விவசாய தொழிலாள மக்களுடைய அன்ருடத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைந்திருப்பதை அறியமுடியும்.

கடந்த அரசாங்கம்மக்கள் பிரச்னைகளை தீர்ப்பதற்கு ஐந்து சிம்மாசனப் பிரசங்கங்களை நடத்தியது ஆனுல் அவற்ருல் எதுவித பயனும் கிடைக்கவில்லை என்பதை மக்கள் சென்ற மே மாதம் 27ந் திகதி அறிவுறுத்தியிருக்கிருர்கள். இதனுல் தங்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மக்கள் அரசாங்கத்தைத் தெரிவு செய்தனர். இவ்வரசாங்கம் தன்மக்களுக்குக் கொடுத்தவாக்குறுதிகளை வார்த்தையில்மட்டுமல்ல, செயலில் நிறைவேற்றும்.

இந்நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிதிநெருக்கடிக்கு உரிய காரணங்களை திரு, சில்வா எடுத்துச் சொன்னுர். எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடைய அரசியல் கொள்கை எப்படி இருந்தாலும் நாட்டின் இக்கட்டான நிலையை சீராக்குவதற்கு மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நாட்டைக் காக்கும் நிதிக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்,

செனட்டர் டீ. ஜி. வில்லியம் வழிமொழிந்து பேசுகையில், மாணவர்கள் தொழிலாளிகள், விவசாயிகள் ஆகிய மூன்று பகுதியினருமே தேசிய அரசாங்கத்தை வீழ்த்தி மக்கள் அரசாங்கம் இவ்வளவு வெற்றியடைவதற்குக் காரணமாவர்எனக் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் ஏழைப் பொதுமக்களும், சோஷலிசத் தொழிலாளர்களும் மக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கைவைத்திருப்பதோடு, மக்களுடைய துன்பத்தைப்போக்க ஏற்ற நடவடிக்கை எடுப்பர் ஐ தே. கட்சி ஒரு சில முதலாளிகளையே காப்பாற்றியது. ஏழைமக்கள் அவர்களை அரசியலிருந்துவெளியேற்றியது தெளிவானது சரியானது.

முன்பு சொன்ன மூன்று வகைவகுப்பினருக்கும் முன்னைய அரசாங்கம் எவ்வித நன்மையும் செய்யவில்லை.

உழைக்கும் மக்களுடைய அவசியப்பிரச்னைகளை- சிறப்பாக டல்கலைக்கழக மாணவர்கள் பிரச்னைகளைதீர்க்க முன்னைய ஆட்சியினர் எடுத்த நடவடிக்கைப் போக்கும் அவர்களுடைய தோல்விக்கு முக்கிய காரணங்களில் ஒன்ருகும்.

மக்களால் ஒப்படைக்கப் பட்டகடமைகளை நிறைவேற்ற மக்கள் அரசுடன் எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் கேட்டுக் கொண்டார்'

## நயினை யாத்திரீகர்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம் உதவி

நாவற்குழி - செவ். யாழ்ப்பாண செஞ்சிலுவை சங்கத்தின் முதலுதவிப் பகுதியினர் மாவட்ட சுப்பிரிண்டன் திரு. ஆதிரெத்தினம் தலைமையில் நாவெயிலிருந்து குறிகாட்டுவான், நயினுதீவு துறைமுகங்களில் கடமையாற்றுவார்கள்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நயினைநாகபூஷணிஅம்பாள் ஆலய உற்சவத்திற்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிறுவப் பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தின் காரியதரிசி திரு. ஆர். இ இராசநாயகம் யாழ்ப்பாணம் காரியாதிகாரியை இச் செஞ்சிலுவைச் சங்க முதலுதவியாளர்களின் போக்குவரத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதவுமாறு கேட்டுள்ளார்.

காலஞ் சென்றவரின் தாயார் சின்னம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது சம்பவம் நடந்த தினம் நானும் மகனும் தோட்டத்திற்குச் சென்று பாத்திகட்டினேம். காலை நேரம் முழுவதும்பாத்திகட்டுவதில் இருவரும் ஈடுபட்டோம் தண்ணீர் பாச்சுவதற்கு யந்திரத்தை தயார் செய்யும்படி மகனிடம் கூறிவிட்டுச் சென்றேன். சிறிது நேரத்தால் என் மகள் புஸ்பராணி 'அண்ணன் ஏதோ குடிப்பதாகக்' கூறினர். நான் ஓடிவந்து அவரிடமிருந்த போத்திலைப் பறித்தேன் என்மகன் நிலத்தில் விழுந்தார் அதன் பின் அயலவர்கள் அவரை ஆஸ்பத்திரிக்கு காரில் கொண்டுசென்றார்கள்,

எனது மகன் தோட்ட வேலை செய்ய முடியாதிருப்பதாக அடிக்கடி கூறி வந்தான் தோட்ட வேலையை விட்டுக் கடையொன்றில் வேலைதேடப் போவதாகவும் கூறினர். தோட்டவேலை செய்தால் தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்று அவரிடம் கூறினேன்

மரணவிசாரணையின் பின் தற்கொலையான மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்

## 'ஓய்வுநேரம் உடற்பயிற்சி செய்க'

முசலி, திங்கள்

'மனிதனுக்கு உடற்பயிற்சி மிக்க அவசியம் உடற்பயிற்சி நிச்சயம் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒருசேர உறுதியளிப்பதாகும். இதன் அவசியத்தை உணர்ந்தே விளையாட்டுத்துறைக்கெனத் தனி அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. ஓய்வு நேரத்தில் ஒவ்வொருவரும் தமது உடல் சுகத்தைப் பேணும் வகையில் உடற்பயிற்சி செய்தல்வேண்டும்' என மாந்தைக் காரியாதிகாரி பிரிவில் நடந்த சன சமூக நிலையங்களிடையேயான மெய்வல்லுநர் போட்டியின்போது காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் கூறினர்.

அடம்பன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டியில் அடம்பன், நெடுங்கண்டல் சன சமூக நிலையங்கள் கலந்துகொண்டன. மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எம். டி. தம்பிராசா போட்டியை ஒழுங்குசெய்தார்.

செய்யப்பட்டு ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தைப் பெறுவதில் காலதாமதமும் சிரமங்களும் ஏற்படலாமென கிராமசேவகர்கள் அறிவித்துள்ளனர்.

## ஆலய உற்சவம்

அல்லைப்பிட்டி - திங்.

புங்குடுதீவு குறிகாட்டுவான் மனேன்மணி அம்மன் தேவாலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 6-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். 14-ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

## எம். பி.யின் முதல் நடவடிக்கை

அல்லைப்பிட்டி - திங்.

ஊர்காவற்றுறை பட்டின சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு குழாய் மூலம் நீர் வழங்கும் 'பம்புகள்' பழுதடைந்து பல வருடங்களாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததினுல் மக்கள் குழாய் நீர் பெறுவதற்கு மிகுந்த கஷ்டப்பட்டு வந்தார்கள். இது சம்பந்தமாக இவர்கள் காவலூர் ஆட்சி மன்ற அங்கத்தவர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திடம் முறையிட்டதின் பயனுக திரு. இரத்தினம் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடனடியாக பம்புகளைத் திருத்தும்படி உத்தரவிட்டதனுல் தற்போது பம்புகள் திருத்தப்பட்டு மக்கள் குடிநீர் பெறுகின்றுர்கள்

## தரமுயர்த்த கோரிக்கை

பண்டத்தரிப்பு, திங்கள்

இளவாலை மெய்கண்டான் வித்தியாலய பெற்றேர் ஆசிரியர் சங்க கூட்டம் வித்தியாலயதலைமை ஆசிரியர் திரு க. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி வித்தியாலயத்தை மகா வித்தியாலய தரத்திற்கு உயர்த்தி மாணவர்களுக்கு உயர்கல்விவசதி செய்து தரவேண்டும். என்று கல்வி அமைச்சரைக் கோரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாக இக்கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. நவரத்தினம். உபதலைவர்கள் திரு. ஆ. கணபதிப்பிள்ளை, திரு க. இரத்தினம் செயலாளர் திரு. ச கனகசபாபதி உபசெய. திரு சு. மாணிக்கம் தனதிகாரி திரு. செ முருகையா.

## தணிக்கை செய்வதில் கடுமையாக இருப்பார்களாம்

சென்னை, ஜூன் 15

''கடந்த இரண்டு ஆண்டுகளில் தணிக்கைக்கு வந்த படங்களில் ஆபாசமும் பயங்கரமும் அதிரிகத்துள்ளன. இந்தியாவில் தயாரிக்கப்படும் படங்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் படங்களும் ஒரே மாதிரியாக ஆபாசம் நிறைந்ததாகவும், திகிலூட்டக் கூடியதாகவும் இருக்கின்றன. எனவே ஆபாச சினிமாப் படங்களை தணிக்கைசெய்வதில்கடுமையான நடவடிக்கையைப் பின்பற்றவேண்டும்.'

சென்னையில்கூடிய சினிமா தணிக்கைக்குழுவினர் கூட்ட முடிவில் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

படங்களை தணிக்கை செய்வதில் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும், என்று தணிக்கை ஆலோசனைக் குழுவினருக்கு உத்தரவிடமுடிவுசெய்திருக்கிறும் ஆபாசம் தவிர கோரமான காட்சிகளும் வன்முறைசம்பவங்களும் உறுதியுடன் தணிக்கை செய்யப்படும். ஆகவே படத்தயாரிப்பாளர்கள் தாங்களாகவே ஆபாசக் காட்சிகளை அகற்றிவிடுவது நல்லது.

மேயர் தேர்தல்

## இந்திரா காங்கிரஸ் வெற்றி

கொச்சி, ஜூன் 15

கேரளாவில் கொச்சி மாநகராட்சிமன்ற மேயர் தேர்தல் நடைபெற்றபோது இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த ஏ. கொச்சுனியும், சின்டிகேட் காங்கிரஸைச் சேர்ந்த ஹக்செல் என்பவரும் போட்டியிட்டனர். இருவருக்கும் சமமான வாக்குகள் கிடைத்ததால் சீட்டுக்குலுக்கப்பட்டது. இதன்மூலம் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த கொச்சுனி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். கடந்த ஆண்டு இவர் மேயராகவிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

— —

கடத்தப்பட்ட

## தூதுவரை விடுவிக்க முயற்சி

றியோடிஜெனரோ, ஜூன் 15

பிறேஸில் நாட்டில் கடத்திச்செல்லப்பட்ட மேற்கு ஜெர்மன் தூதுவரைத் திருப்பித்தருவதற்கு புரட்சிவாதிகள் விடுத்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு பிறேஸில் அரசாங்கம் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது. விடுதலை செய்யும்படி புரட்சிவாதிகள் கோரியிருக்கும் 40 கைதிகளில் பழைய ராணுவ வீரர்களும் இருக்கிறுர்கள்,

இவர்கள் அனைவரும் இப்பொழுதுறியோடிஜெனரோவுக்கு கொண்டுவரப்படுகிறுர்கள் இவர்களை டெலிவிஷன்களில் காட்டும்படியும் புரட்சிவாதிகள் கோரியிருக்கிறுர்கள்.

# இந்தோசீனவில் அமைதி ஏற்படுத்த யுதாண்ட் முயற்சி

லண்டன், ஜூன் 15

ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் யுதான்ட் இன்று மாஸ்கோ செல்லும் வழியில் லண்டன் வந்து சேர்ந்தார்.

லண்டனில் பிரிட்டிஷ் வெளி உறவு அமைச்சரையும் இதர முக்கிய அதிகாரிகளையும் அவர் சந்தித்து மேற்காசிய நெருக்கடிகள் பற்றியும் இந்தோ - சீன பற்றியும் ஆலோசனைகள் நடத்துவார்.

இன்று மாலையில் யுதாண்ட் மாஸ்கோவுக்குப் புறப்படவிருந்தார்.

மேற்காசியா பற்றியும் இந்தோ-சீன நிலைமை பற்றியும் சோவியத் தலைவர்களோடும் யுதாண்ட் பேச்சுக்கள் நடத்துவார்.

இந்தோ சீன பற்றிய ஜெனிவா மகாநாட்டுக்கு பிரிட்டனும் சோவியத் யூனியனும் கூட்டுத் தலைமை வகித்தது ஞாபகமிருக்கலாம். இந்தோ-சீன நிலைமை குறித்து சர்வதேச மகாநாடொன்று கூட்டப்படவேண்டும் என்று யுதான்ட் ஏற்கனவே யோசனை கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுசம்பந்தமாகவே அவர் இந்த நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை கலக்கவிருக்கிறுர் என்று கருதப்படுகின்றது.

## கணவன் மனைவிக்கு அபராதம்

சென்னை, ஜூன் 15

சைகோன் நகரிலிருந்து வைரம்கடத்திவந்ததாககுற்றம் சாட்டப்பட்ட வழக்கில் கணவன் மனைவிக்கு தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கே. ஆர். அப்துல்மஜீத், பரீதாபேகம் என்பவர்களுக்கே அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள்மீது ஏற்கனவே ரூ 45 லட்சம் வெளிநாடடுப் பணமோசடி செய்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் இருக்கிறது.

சுகாதார வாரவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ, கட்டிடத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு டாக்டர் அத்தனுசியார் தலைமை வகித்தார். டாக்டர்கள் பலர் ஆரோக்கிய வாழ்வுபற்றி உரையாற்றினர். நாடகம், சுகாதாரப் படக்காட்சி என்பனவும் கலை கதம்ப நிகழ்சிகளும் இடம்பெற்றன. ஆரோக்கிய 'ராஜன்' ஆரோக்கிய 'ராணி' போட்டியும் இடம் பெற்றது.

காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் சென்ற 10-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 16-ந் திகதி தண்டிகை உற்சவமும், 19-ந் திகதி கேடக மஞ்சோற்சவமும், 22-ந் திகதி சப்பற உற்சவமும், 23-ந் திகதி ரதோற்சவமும், 24-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

சென்ற காலங்களிலே பத்து நாட்கள் நடைபெற்றுவந்த உற்சவம் இவ்வாண்டு முதல் முறையாகப் பதினைந்து நாட்களாக நடைபெறவிருக்கிறது

னம் தலைமையில் நாளையிலிருந்து குறிகாட்டுவான், நயினதீவு துறைமுகங்களில் கடமையாற்றுவார்கள்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நயினைநாக பூஷணிஅம்பாள் ஆலய உற்சவத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு உதவு முகமாகவே மேற்படி செஞ்சிலு

## பௌர்ணமி கலைவிழா

யாழ்ப்பாணம், செவ்.

பௌர்ணமி நாள் கலைவிழா 19-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30மணிக்கு யாழ் திறந்த வெளியரங்கில் மாநகரமுதல்வர் திரு. தா. ச. துரைராசா தலைமையில் நடைபெறும்.

கோட்டைக்காடுகுழந்தைவேல் கலா மன்றத்தினரின் 'வேடிக்கை உலகம்' என்னும் நகைச்சுவை நாடகமும் இலங்கைத் தேசிய கயரோக நிவாரண சங்கம் அளிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

நாயகம் யாழ்ப்பாணம் காரியாதிகாரியை இச் செஞ்சிலுவைச் சங்க முதலுதவியாளர்களின் போக்கு வரத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதவுமாறு கேட்டுள்ளார்.

— —

## 'தேர்ச்சி நிபந்தனையை குறையுங்கள்''

சுழிபுரம், திங்கள்

அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்து கலவையாளர்களுக்கு அநீதியான முறையில் விதிக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பு சிங்கள தேர்ச்சி நிபந்தனையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க மருந்து கலவையாளர் சங்கத்தின் யாழ். கிளை கோரியுள்ளது.

இக்கிளையின் காரியதரிசியான தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு. மா. கந்தசாமி சுகாதார மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் சிறுசேவை ஊழியர் தரத்திலுள்ள மருந்து கலவையாளர்ளுக்கு எட்டாம்வகுப்பு நிபந்தனை விதித்திருப்பது மிகவும் அநீதியானதாகும். அவர்களிலும் பார்க்க கூடிய சம்பள விகிதம் உள்ளவர்களான பாமசிஸ்ட்டுகளுக்கு ஐந்தாம் வகுப்பு நிபந்தனை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே தயவுசெய்து சிங்கள தகைமையை குறைக்க நடவடிக்கை எடுத்து நிவாரணம் அளிக்குமாறு வேண்டுகின்றேம். என்று தெரிவித்துள்ளார்.

— —

## திருடர் தொல்லை

உரும்பராய், திங்கள்

கோப்பாய் வடக்கிலுள்ள மானுவெளிப் பகுதியிலுள்ள தோட்டக் கிணறுகளில் பொருத்தப் பட்டிருக்கும் நீரிறைக்கும் யந்திரங்களிலிருந்து சில முக்கியஉறுப்புக்கள் திருடப்பட்டுள்ளது.

மக்கினெற் எண்ணைக் குழாய் போன்ற முக்கிய உறுப்புகளைப் பறிகொடுத்த ஏழை விவசாயிகள் தமது பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச முடியாது அவதிப்படுகின்றனர்.

இதுபோன்ற களவுகள் அப்பகுதியில் நடைபெறுவதற்கு மதுபானக்கடைகள் ஊராவேளைகளில் திறந்திருப்பதும் ஒரு காரணமாயிருக்கலாமென கருதப்படுகிறது.

# 'வகுப்புவாதம் போலவே வன்முறையும் அபாயகரமாகும்'

— இந்திராகாந்தி

புதுடில்லி, ஜூன் 15

வகுப்புவாதத்தைப் போலவே இடமிசாரிதுணிகர வன்செயல்களும் அபாயகரமானவையென்று பாரத பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி கூறினர்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினர். நாட்டில் ஏற்பட்டுள்ள வகுப்புவாதப்போக்கு பற்றி மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பிரதம மந்திரி பேசினர்.

என்னை இந்துமத விரோதி என்கிறுர்கள். ஆனல் இந்துக்கள் என்பவர்கள் யார் என்று நான் கேட்கவிரும்புகிறேன் என்றுர் பிரதம மந்திரி.

ஒருதாயின் கண் முன்னலேயே நான்கு குழந்தைகளையும் கொன்றவர்களா இந்துக்கள் என்று திருமதி இந்திராகாந்தி கேட்டார்.

கோமாதாவுக்காக கண்ணீர் வடிப்பவர்கள், தேர்தல் காலத்தில் பார்த்து இந்தப் பிரச்னையைக் கிளப்புகிறுர்கள். அதுவரைக்கும் கோமாதாவுக்கு ஏற்படும் துன்பங்கள் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை என்றுர் பிரதம மந்திரி, மதச்சார்பின்மையை நாம் உறுதியாகப் பின்பற்றிநிற்க வேண்டும். இதற்காக உயிரையும் விடுவதற்கு தயாராய் இருக்கவேண்டும் என்று பிரதம மந்திரி கேட்டுக் கொண்டார்.

காங்கிரஸ் கமிட்டியில் நேற்று நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானமொன்றில் வலது சாரிகளின் பிற்போக்கு, இடதுசாரிகளின் வன்முறைப்போக்கு, வகுப்புவாதம் போன்ற அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன

இனவாதங்களை எதிர்த்துப்போராடுவதற்கு எல்லோரும்ஒத்துழைப்புவழங்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

## 'மருந்துக்குச் செலவிடுவதை உணவுக்குச் செலவிடுங்கள்'

பருத்தித்துறை திங்கள்

''சத்துள்ள உணவுகளைச் சாப்பிட்டு வந்தால் அதிக பணம் செலவு செய்து வைத்தியசாலைகளுக்கு அலையவேண்டிய அவசியமில்லை, எமது வேலை நேரத்தை இழக்கவேண்டி நேரிடாது. எனவே கிராமப்புற மக்கள் பணப்பயிர்களை நாட்டுவதுடன் சிறந்த உணவுப்பயிர்களையும்பயிரிட வேண்டும்''.

இவ்வாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி. வ. சிவசுப்பிரமணியம்வெள்ளிக்கிழமையன்று வறணியில் நடைபெற்ற சுகாதார வாரக் கூட்டத்திற்பேசுகையில் குறிப்பிட்டார்

வறணி கிராம சபைத் தலைவர் திரு. க. முருகேசு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வரணி மகா வித்தியாலய அதிபர் திரு. வ. தங்கராசா பேசும் போது குறிப்பிட்டதாவது.-

''சுகாதாரம் பாடசாலைகளில் கட்டாயபாடமாக்கப் பட்டால் மக்கள் ஆரோக்கியத்துடன் வாழவழியேற்படுவதுடன். அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவும் பெரிதும்குறையும். திடகாத்திரமற்ற ஓர் தேசீயஇனம், பிற்சந்ததியினருக்கு எவ்வித நன்மையையும் விட்டுச்செல்ல முடியாது''.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வைத்திலிங்கம் கொடிகாமம் சுகாதாரப் பரிசோதகர் திரு பொ. சிவராமலிங்கம் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் ஒருவரையே அடைக்கலமாகக் கொண்டவருக்கு கவலையோ பயமோ எதற்கு? அவர் கையில் உங்களை அப்படியே ஒப்புவித்துவிடுங்கள். எல்லாம் களுக்கு நன்மையாகவே முடியும். சரணாகதியின் ரகசியமும் இதுவே. இதனாலேயே உண்மையான விடுதலையும் ஆனந்தமும் கிடைப்பதாகும்.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 2-ந் திகதி (16-6-70)


## ஒரு முக்கிய பிரச்னை

இன்று நாட்டிலுள்ள வேலையில்லாக் கஷ்டமெனும் முக்கிய பிரச்னைக்குக் காரணம் இப்போது நடப்பில் இருந்துவரும் விரும்பத்தகாத கல்விமுறைதான் என்று உதவிக்கல்வி அமைச்சர் திரு. துடாவை, மாத்தறையில் ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசுகையில் சரியாக அறிவுறுத்தினர். இந்தக் கல்வி முறையை மாற்றி நாட்டின் அபிவிருத்திக்கான ஒரு புதிய முறையைப் புகுத்தாத வரை, வேலையில்லாக் கஷ்டம் உள்ளிட்டு நாட்டின் பல பிரச்னைகளையும் தீர்க்க முடியாதென்றும் கல்வி முறையை சீக்கிரத்தில் புதிய அரசாங்கம் மாற்றப்போவதாகவும் அறிவித்தார். இம் முக்கிய விஷயமாக அரசாங்கம் எடுக்கும் முயற்சியில் தமிழ்ப் பிரதிநிதிகள் உள்ளிட்டு பொதுமக்கள் அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்குமென்றே எதிர்பார்க்கலாம்.

வேலையில்லாக் கஷ்டம் இலங்கையில் மட்டுமன்றி உலகில் அநேகமாக எல்லா நாடுகளிலும் (சோஷலிஸ நாடுகளைத் தவிர) இருந்து வருகின்றது. இங்கு சோஷலிசக் கொள்கைகளை படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவருகையில் இந்தப் பிரச்னையும் குறையக் கூடும் ஆனால் இன்றுள்ள கல்விமுறை அன்னிய அரசாங்கத்தால் தங்கள் தேவைக்காகப் புகுத்தப்பட்டது. தங்களுக்கு உதவிசெய்யக் கூடிய குமாஸ்தாக்களைப் பெறுவதற்காகத்தான் இக் கல்விமுறையைத் தயாரித்தனர். உடல் உழைப்பு வேலைகளை மட்டமானதென்றும், பேனா ஓட்டி பிறர் மீது அதிகாரம் செலுத்தும்படியான வேலையைப் பெறுவதுதான் படிப்பதின் நோக்கமென்றும் பொதுவாக ஒரு தவறான கருத்து உருவாகியுள்ளது. துரதிருஷ்டவசமாக அவ்வித

அதிகரித்துக்கொள்ளாமல் எளிமையாக வாழமுற்பட்டால் வேலையில்லை என்று தவிக்க வேண்டியிராது, சம்பளஅடிமைகளாகத்தான் வேண்டுமென்ற எண்ணத்தைவிட்டு, தாங்களே சுதந்திரமாக ஏதாவது தொழில் செய்து ஜீவனம் நடத்த வாலிபர்கள் துணிச்சலுடன் முன்வந்தால் புதிய அரசாங்கம் அளிக்கவிருக்கும் பலஉதவிகளைக்கொண்டு அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே நல்லபடி தீர்த்துக்கொள்ளக் கூடும். முயற்சி திருவினையாக்கும். தங்கள் உடல் உழைப்பால் தாங்களே அரசாங்கத்தையோ, பிறரையோ எதிர்பாராமல் தங்களுக்கான முயற்சிகளைச் செய்துகொள்ளக்கூடியவர்கள் உண்மை சுதந்திர வீரர்கள். அவர்கள் நாட்டுக்கும் நல்ல உதவி செய்பவர்கள் ஆவர்.

உத்தியோக மோகத்தை சிறப்பாகத் தமிழர் விட்டுவிட வேண்டும். டாக்டர்கள், என்ஜினியர்களாக விரும்பும் மாணவர்கள் அதிகமாகக் காரணம் என்ன? அதிக வருமானமும் படிப்பு முடிந்ததும் உடன் ஒரு வேலை கிடைக்கலாமென்ற நம்பிக்கையும்தான். வைத்திய என்ஜினியரிங் கல்வி பயின்றவர்களிற் பலர் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றனர். இந்நிலையில் மேலும் குருட்டுத்தனமாக அதே நோக்கத்துடன் நம் வாலிபர்கள் படித்துக்கொண்டு போவது நல்லதா? புதிய அரசாங்கம் எல்லோருக்கும் வேலை அளிக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்பிரச்னையைத் தீர்க்க அரசாங்கம் தன்னாலான உதவிகளைச் செய்யலாம், கல்வி முறையைத் திருத்தி அமைக்கக்கூடும். இந்த முயற்சியிலே பொதுமக்களும் சிறப்பாக வாலிபர்களும் பூரணமாக ஒத்துழைத்து, தியாகத்துக்கும் தயாராக இருந்தால்தான் இப்

# விஞ்ஞானம் குறிப்பிட்ட நாட்டுக்கும் ஜாதிக்கும் உடைமையல்ல

டாக்டர்
தௌலத் சிங்கோத்தாரி

அணு, பனிதன், அகிம்சை இபமூன்றும் தனிமனிதனுக்கும், மனித இனத்தின் வருங்காலத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று உலகில் மனிதசமுதாயங்கள் எத்தனை வேண்டுமானாலும் இருக்கட்டும். அவர்கள் எந்க்கொள்கையைச் சார்ந்திருந்தாலும், எம்மதத்தினராக இருந்தாலும் எல்லோருடைய வளர்ச்சியும், வளர்ச்சி மட்டுமா, அவர்கள் நிலைத்திருப்பதே விஞ்ஞானத்தைச் சார்ந்திருக்கிறது எந்த ஒரு குறிப்பிட்டநாட்டுக்கும், ஜாதிக்கும் தனி உடைமையல்ல. விஞ்ஞானம் உலகம் முழுவதுக்கும் ஒரே விஞ்ஞானம்தான் இன்று உலகமே ஒரு வீடுபோன்று ஆகிவருகிறது.

### விஞ்ஞான மனோபாவம்

உலக அமைதியும் அகிம்சையும் நடைபெறமுடியாத கனவல்ல. நடைமுறை லட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு மனித இயல்துறையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவது அவசியமாகும். அதிகாரத்திற்கும் சுரண்டுவதற்காகவும் அன்றி ஏழைமையை விரட்டவும், அறிவின்மையிலிருந்தும் கஞ்சத்தனத்திலிருந்தும் விடுதலை பெறவும் விஞ்ஞானம் பயன்பட வேண்டும். இதற்கு விஞ்ஞானம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவு விஞ்ஞான மனோபாவமும் விஞ்ஞான ஆர்வமும் அவசியமாகும்.

இந்தியப் பரம்பரை மிகவும் அசாதாரணமானது. இதன் வாழ்க்கை நிகழ்ச்சிகளால் நிறைந்திருக்கிறது. அது புது வளர்ச்சி, புது விழிப்பு யுகத்தில் நுழைந்து கொண்டிருக்கிறது. இந்த முறையில் உலகில் இந்தியாவுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது.

மேலைநாடுகள் தொழில் மற்றும் விஞ்ஞானப் புரட்சியில் நுழைந்துகொண்டிருந்த போது அவற்றிற்கு கீழ் பகுதியின் குறிப்பாக இந்தியாவின் தத்துவ ஞானத்தைப்பற்றித் தெரியாமல் போனது துரதிர்ஷ்டமாகும். விஞ்ஞானத்தின் மிகப் பிரசித்திபெற்ற சரித்திரக்காரர் ஜார்ஜ்சார்டன். 19-ம் நூற்றுண்டில் இந்தியநாகரி

ந்த முக்கியத்துவமில்லை என்று எழுதியிருக்கிருர். ஆனல் அதைப்பற்றி யாரும் சிந்திக்கவில்லை. மேலைநாட்டினர் கிழக்குப் பகுதியினரைச் சுரண்டினர்கள். அவர்களை அடிமை ஆக்கினர்கள். அவர்களது ஆன்மீகப் பரம்பரையை இவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய செல்வங்களை கொள்ளையடித்தார்கள். ஆன்மாவையும் அடிமை கொண்டார்கள். இன்று மேலைநாடுகள் அவர்களது அறியாமையின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிருர்கள்.

மனிதனுக்கு எவ்வளவு புதிய அறிவு அவசியமோ, புதிய இயந்திரங்கள், புதிய தொழில் நுட்பம் அவசியமோ, அதையெல்லாம்விட அதிகமாக விவேகமும், கருணையும், மன ஆற்றலும் தேவை.

### அறிவு

சென்ற 10-15 ஆண்டுகளில் அறிவு இருமடங்கு அதிகரித்துவிட்டது. அவ்வளவு வேகமாக அறிவு வளர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன் பல நூற்றுண்டுகளில் கிடைத்திருக்கமுடியாத அளவு அறிவு அடுத்த 10-15 ஆண்டுகளில் சேர்ந்துவிடும். விஞ்ஞானப்புரட்சி மேலை நாடுகளில் ஏன் ஏற்பட்டது. பாரதம், சீனவில் ஏன் ஏற்படவில்லை? அறிவு வளர்ச்சியில் 15 ஆண்டு காலம் ஏன் இவ்வளவு முக்கியமாகிவிட்டது? உண்மையான பொருளில் விஞ்ஞானம் உலகம் முழுவதும் வியாபித்தது என்பது ஒன்று இரண்டாவது விஞ்ஞானி ஆவதற்கு அசாதாரணமான திறமைதேவையில்லை, விஞ்ஞானத்துறையில் அதிக பட்சமான ஆராய்ச்சிகளை சாதாரண, மிக சாதாரண மக்களே செய்திருக்கிருர்கள்.

### ஒரு புதிய சிந்தனை

சென்ற இரண்டாவது உலகப் போருக்குப் பின்னல் விஞ்ஞானிகளிடையே ஒரு புது[illegible]ந்தனை வெளிப்பட்டிருக்கிறது. அணுக்குண்டு விஞ்ஞானிகளின் மனத்தில் பெரும் குழ[illegible] ஏற்படுத்தியுள்ளது. இத[illegible] விஞ்[illegible]னம் பயன்பட

வருத்தமான சொற்களால் வெளியிட்டிருக்கிருர். அணு ஆயுத வளர்ச்சிக்காக ஓபன்ஹாயிமா, பர்மிடேலர் ஆகியோர் பாடுபட்டு பெரும் பெயர் ஈட்டியுள்ளார்கள். 'என்னுடைய வாழ்க்கையும் நோக்கங்களும்' என்ற நூலில் எழுதுவதாவது:

'இதுபோன்ற தகுதி வாய்ந்த சீடர்களைப் பெறுவது மகிழ்ச்சிகரமானதுதான் ஆனல் அவர்களது விஞ்ஞான அறிவை சிறிது குறைவாகவும். விவேக அறிவை சிறிது அதிகமாகவும், வெளிக்காட்டியிருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும்? அவர்களுக்கு சோதனை செய்வதற்கு அதிகமாக நான் அவர்களுக்கு வேறு ஒன்றும் கற்றுக்கொடுக்க முடியவில்லை. தவறு என்னுடையதுதான். அவர்களுடைய அறிவு உலகை எவ்வளவு சங்கடத்தில் ஆழ்த்திவிட்டது

விஞ்ஞானத்திற்கும் தார்மீகத்திற்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. ஆனல் விஞ்ஞானத்தின்மீது நம்பிக்கை வைப்பது ஒரு தார்மீக நற்குணமேதான். பெரும்பாலான விஞ்ஞானிகள் தங்கள் உயிரையும் கொடுத்து இக்குணத்தைப் பாதுகாத்திருக்கிருர்கள். இரு துறைகளில் விஞ்ஞானம் தன்னுடைய முடிவான வெற்றியை நிலைநிறுத்தியிருக்கிறது. ஒன்று இராணுவ ஆற்றல், மற்றது தொழில் வளர்ச்சி விஞ்ஞானத்தைப்பூசிப்பது இக்காலத்தின் பேஷனுக ஆகும் அளவுக்கு இந்த வெற்றிகள் எடுத்துக்காட்டுகள். புதிய நாகரித்தில் விஞ்ஞானத்திற்குள்ளதைக் காட்டினும் அதைப்பற்றிய புகழுக்கு அதிக இடம் அளிக்கப்படும். அதிகமாகப் புகழப்பட்டாலும்கூட நடைமுறைப் பிரச்னை வரும்போது தனிப்பட்டவர்களும், அரசுகளும், அதிக கவனம் செலுத்துவதில்லை. அரசு வருவா[illegible]ல் மிகச்சிறிய பகுதிதான் [illegible]ஞ்ஞான ஆராய்ச்சிக்கும், கல்விக்கும் ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு விஷயத்திற்கும் அடிப்படையான விஞ்ஞானத்தின் பேரிலும் [illegible]வி

கின்றன. அவர்களிடம் கணப்பொழுதில் இலட்சக்கணக்கான மக்களை மரணத்தின் வாய்க்குள் அனுப்பும் சாதனங்கள் இருக்கின்றன. இவர்களிடம் கஞ்சா போன்ற போதை வஸ்துக்கள் இருக்கின்றன.

எல்லையற்ற ஏழைமை எவ்வாறு மனிதனுக்கு எதிரியோ இதே போன்ற எல்லையிலா செல்வமும் எதிரியே அபரிமிதமான கஷ்டமும் மனிதனை நாசம் செய்வது மட்டுமல்லாமல் நாடுகளையும் நாசம் செய்து விடுகின்றன முன் காலத்தில் பெரிய உடல் கொண்ட பிராணிகள் உடல் பாரம் தாங்காமல் முடமாகி அழிந்து விட்டன என்பதை நாம் அறிவோம்.

### அன்றும் இன்றும்

உலகப் படைப்பு முழுவதிலும் தன் இனத்தையே சேர்ந்த பிற உயிர்களை கொள்ளும் பழக்கம் உடையவன் மனிதன் தான்- எந்தக் காரணமின்றியும் பயனின்றியும் கொள்கிருன். ஒருமனிதன் மற்ருெரு மனிதனைக் கொல்லும் வழக்கத்தை இயற்கையிடமிருந்து கற்கவில்லை இது அவனுடைய விசித்திரமான கண்டுபிடிப்பும், வரப்பிரசாதமும் ஆகும். பண்டைக் காலத்திலும் கூட கொல்லுவது காட்டுமிராண்டித் தனத்தின் இலட்சணமாகக் கருதப்பட்டது. அந்த காட்டுமிராண்டித் தனத்தை இந்த அணுயுகத்திலும் தொடர்ந்து கொள்வதென்பது பரந்த அளவில் சர்வநாசம் விளைவிப்பதைவிட வேறு என்னவாக இருக்க முடியும். பகுத்தறிவுக்கு இது ஒரு சவாலாகும்.

மனிதன்- நம்மிலிருந்து ஒவ்வொருவரும் இலட்சக்கணக்கான வருடப் பரப் பரம்பரைக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிருன். நமக்கு முன்னர் எவ்வளவு நீண்ட சென்றகாலமிருக்கிறதோ அதைவிடக் குறைந்ததல்ல வருங்காலமும். மனிதன் உலகப் பிரஜையாக ஆகப்போகும் வரிசையில் இருக்கிருன் வளர்ச்சிப் பாதையில் தன்னுடைய வருங்காலத்தைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும்அளவிற்கு மனிதனுடைய அறிவு வளர்ச்சியடைந்துள்ளது. ஒருபக்கம் மனிதன், மறு பக்கம் அவனு

## 'புதிய அரசினல் ஆசிரியர் எதிர்காலம் சுபீட்சமுறும்'

— தமிழாசிரியசங்கத்தலைவர்

உரும்பராய். திங்கள் "ஆசிரியர்கள் கடந்த காலங்களில் பலவித கஷ்டங்களையும் எதிர் நோக்கிச் சமாளிக்க வேண்டியிருந்தது ஆசிரியர்களுக்குப் பலவித தொந்தரவுகள் ஏற்பட்ட காலங்களில் அவர்களைக் கஷ்டங்களிலிருந்துவிடுவிக்க அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்கம் துரித நடவடிக்கைகளை எடுத்தது. நமது சங்கம் அந்த நடவடிக்கைகளை எடுத்திராவிட்டால் எமது கிளைச்சங்கங்கள் சிதறுண்டுபோயிருக்கும். அவ்வாறு சிதறுண்டு போகாமல் பாதுகாத்த அகில இலங்கை தமிழாசிரியர் சங்கத்தைப் பாராட்டுகின்றேன். புதிய அரசாங்கத்தில் நல்ல சூழ்நிலையில் கல்விப் பகுதி இயங்க ஆரம்பித்துள்ளது. புதிய கல்வி அமைச்சர் ஆசிரியராகவே பணிபுரிந்தவர். ஆசிரியர்களுடையகஷ்டங்களை நன்குணர்ந்த ஒருவர் கல்விஅமைச்சராக கிடைத்திருப்பதால் ஆசிரியர்களின் எதிர்காலம் சிறப்பாகவே இருக்கும் என்று நாம்நம்பலாம்"

சென்ற வியாழக் கிழமை யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோரில் நடைபெற்ற வட இலங்கைத்தமிழாசிரிய சங்கநிர்வாகக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய சங்கத் தலைவர் பண்டிதர் ச, பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

பண்டிதர் ச பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில்:-

ஆசிரிய தொழிற்சங்கங்களின் வளர்சியிலேயே ஆசிரியர்களது முன்னேற்றம் தங்கியுள்ளது ஆசிரியர்களாய் உள்ளவர்கள் ஆசிரிய சங்கங்களின் அங்கத்தவராயிருக்க வேண்டியது அதி முக்கியமானது என்ருர்.

இக்கூட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் 55 வயதில் ஒய்வு பெற வேண்டுமென்று ஒரு சட்டம் வருமாயின் ஆசிரியர் சமுதாயத்துக்குப் பெருநட்டம் ஏற்படும், 55 வயது வந்ததும் ஓய்வு பெற வேண்டும்என்றும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அவ்வாறு செய்யாமல் நடைமுறையில் இருக்கும் திட்டத்தைக் கைக் கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கோருவது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## பஸ்கள் பழுதடைவது கூட இப்போது குறைந்து விட்டது

உடுப்பிட்டி, திங்கள் இலங்கைப் போக்கு வரத்துச்சபைப் பருத்தித்துறை டிப்போவில் இடதுசாரிக் கூட்டணி ஆட்சிபீடம் ஏறியதைக் கொண்டாடும் முகமாக மக்கள் வெற்றித்தினம் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

பருத்தித்துறை டிப்போவிலிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் புறப்பட்ட பஸ்கள் நீலம், சிவப்பு வண்ணத் தாள்களால் அலங்கரிக்கப்பட்டுஓடிக்கொண்டிருந்தன.

இ. போ, ச. பருத்தித்துறைடிப்போவைச் சேர்ந்த சகல பிரிவு ஊழியர்களாலும் டிப்போ வளவில் நடாத்தப்பட்ட மக்கள் வெற்றிவிழாக் கூட்டத்தில் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மோட்டார்த் தொழிற்சங்கத் தலைவர் திரு. கே. நல்லதம்பி உரையாற்றுகையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் பருத்தித்துறை டிப்போ பஸ் சேவை சீர ஒழுங்காக நடைபெறச் சகல ஊழியர்களும் ஒத்துழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

பொறியியல் பகுதியைச் சேர்ந்த திரு. ஏ கந்தசாமி திரு. கே. இராமகிருஷ்ணன், திரு வீ. யோகநாதன் ஆகியோரும் பேசினர்.

## ரோயல் கமிஷன் கலைக்கப்பட்டது

கோட்டை - திங்கள் உயர்கல்வி சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவினல் திரு. விலமட பெரேரா தலைமையில் நியமிக்கப்பட்ட ரோயல் கமிஷன் கலைக்கப்பட்டுவிட்டது இக்கமிஷனைக் கலைத்துவிட்டதாக விசேஷ வர்த்தமானி மூலம் மகாதேசாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தக் கமிஷனில் திரு., விலமட பெரேரா, திரு,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

றும், பேனு ஓட்டி பிறர் மீது அதிகாரம் செலுத்தும்படியான வேலையைப் பெறுவதுதான் படிப்பதின் நோக்கமென்றும் பொதுவாக ஒரு தவருன கருத்து உருவாகியுள்ளது. துரதிருஷ்டவசமாக அவ்வித வேலைகள் மிகவும் குறைவு. ஆனல் இந்த பயனற்ற கல்வியைப் படித்துவிட்டு, உடலுழைப்பையும் விரும்பாமல், படித்தபின் வேலையில்லாமல் தங்கள் வாழ்வையும் வீணக்கித் தவிக்கும் ஆண்கள் பெண்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சம் வரை இலங்கையில் உயர்ந்துள்ளதாகத் தெரிகிறது வருடத்துக்குவருடம் இது உயர்ந்து கொண்டே போகிறது.

அன்று நாம் இதே பத்தியில் குறிப்பிட்டதுபோல் இந்தப் பிரச்னையை உடனடியாக, புதிய அரசாங்கத்தாலும் தீர்ப்பதென்பது முடியாத காரியம். பொதுமக்களின் சிறப்பாக வாலிபர்களில் மனப்பான்மை மாறுவதுடன் மக்களின் நன்மைக்கான முறையில் கல்வித்திட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும். தங்கள் உடலால் உழைக்க வாலிபர்கள் தீர்மானிப்பதாயின் பல பிரச்னை தீர்ந்ததாகக் கொள்ளலாம். தேவைகளை

சாங்கம் தன்னுலான உதவிகளைச் செய்யலாம், கல்வி முறையைத் திருத்தி அமைக்கக்கூடும். இந்த முயற்சியிலே பொதுமக்களும் சிறப்பாக வாலிபர்களும் பூரணமாக ஒத்துழைத்து, தியாகத்துக்கும் தயாராக இருந்தால்தான் இப்பிரச்னை தீரமுடியும். பிறர் கையை எதிர்பார்ப்பதைவிட ஒவ்வொருவரும் சுதந்திரமாக யோசித்துப் பொய்க் கௌரவங்களைவிட்டு எளிமையான வாழ்க்கை நடத்தவும் துணிந்துவிட்டால், இப்பிரச்னையை அவரவர்களே தீர்த்துக் கொள்ளமுடியும். சோஷலிஸ முறையில் புதிய ஆட்சி நடைபெறவிருப்பதால், வேலையில்லாக் கஷ்டம் உள்ளிட்டுப் பல பிரச்னைகளும் மக்களின் நன்மைக்கான முறையில் தீரப் புதிய வழிபிறக்குமென்று நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பது மிகையல்ல.

பகுதியின் குறிப்பாக இந்தியாவின் தத்துவ ஞானத்தைப்பற்றித் தெரியாமல் போனது துரதிர்ஷ்டமாகும். விஞ்ஞானத்தின் மிகப் பிரசித்திபெற்ற சரித்திரக்காரர் ஜார்ஜ்சார்டன். 19-ம் நூற்ருண்டில் இந்தியநாகரிகத்தின் கண்டுபிடிப்பு கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்ததைவிட குறை

விஞ்ஞானிகளிடையே ஒரு புது[illegible]ந்தனை வெளிப்பட்டிருக்கிறது. அணுக்குண்டு விஞ்ஞானிகளின் மனத்தில் பெரும் குழறலை ஏற்படுத்தியுள்ளது. இதற்காகத்தானு விஞ்[illegible]னம் பயன்படவே[illegible]ம் என்று கேட்கத் தொடங்கிவிட்டார்கள். அறிவியல் நிபுணர் மைக்ஸ்பர்ன் தனது கவலையை

தில்லை. அரசு வருவா[illegible]ல் மிகச்சிறிய பகுதிதான் [illegible]ஞ்ஞான ஆராய்ச்சிக்கும், கல்விக்கும் ஒது கப்படுகிறது. ஒவ்வொரு விஷயத்திற்கும் அடிப்படையான விஞ்ஞானத்தின் பே[illegible]லும் [illegible]வியின் பேரிலும்மிகக்குறை[illegible] கவனமே செலுத்துகிருர்கள்.

இன்று உலகம் நாற்சந்தியில் நிற்கிறது. முதல் தடவையாக அதுவும் 200 வருடங்களிலேயே மனிதன் சராசரி வயது இருமடங்காக உயர்ந்துவிட்டது. ரோமாபுரி நாகரிகம் சிறந்திருந்தபோது சராசரி மனித வாழ்வின் காலம் 30 ஆண்டுகளாகத்தான் இருந்தது.

இன்று தொழில்துறை முன்னேறியுள்ள நாடுகளைப் பற்றிய கற்பனைகூட அன்று கிடையாது. நம்மைப் போன்ற நாடுகள் அவற்றை காப்பி அடிக்கின்றன. நாம் எப்படியோ உயிரை வைத்துக்கொண்டிருக்கிருேம். செல்வமிக்க நாடுகளுக்கும் ஏழ்மையான நாடுகளுக்குமிடையே உள்ள இடைவெளி நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்லுகிறது. இந்தியாவில் கல்விக்கும். விஞ்ஞானத்திற்கு தனிநபருக்குப் பின்னல் 13 ரூபாய்தான் செலவு செய்யப்படுகிறது. அதே சமயத்தில் அமெரிக்காவில் இச் செலவு ரூ. 1400. பெரிய நாடுகளின் செல்வமும் பெருகியிருக்கிறது. போர்க் கருவிகளும் பெருகியிருக்

கும் வளர்ச்சியில் இருக்கிருே வளர்ச்சிப் பாதையில் தன்னுடைய வருங்காலத்தைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும்அளவிற்கு மனிதனுடைய அறிவு வளர்ச்சியடைந்துள்ளது. ஒருபக்கம் மனிதன், மறு பக்கம் அவனுடைய எதிர்காலம். பண்டைக் காலத்தின் வாழ்க்கைச் சூழ்நிலை எவ்வளவு சிக்கலாகஇருந்ததோ அதைவிட அதிகச் சிக்கல் நிறைந்த (தொழில் நுட்ப யுகத்தில்) இருக்கிறது. இதைக் கடந்து செல்ல, அவனுக்கு உற்சாகமும் சாமர்த்தியமும் அவசியம் தேவை கிழக்கு-மேற்கின் பூரா நுண்ணறிவு அதாவது விஞ்ஞானம், அகிம்சையும் முழுதும் பயன்பட வேண்டும்.

பார்ப்பதற்கு கடினமாகத் தோன்றினுலும் விஞ்ஞானம் அடிப்படையில் சுலபமானதுதான், அகிம்சை பார்ப்பதற்கு சுலபமாக இருக்கிறது. ஆனல் உள்ளுக்குக் கடினமானது- விஞ்ஞானம் அறிவை முக்கியமாகக் கொண்டது, அகிம்சை தார்மீகத்தையும், ஆன்மீகத்தையும் அடிப்படையாகக் கொண்டது கல்வியறிவு வளர வளர, உலகம் விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் ஆதாரமாகக் கொண்டே செல்லும்.

— —

சந்திர வீரர்

## ஆம்ஸ்ரோங்கிற்கு புதிய பதவி

வாஷிங்டன், ஜூன் 16

அம்புலியில் முதன்முதலில் அடியெடுத்துவைத்த நீல் ஆம்ஸ்ரோங்கிற்கு இப்பொழுது புது வேலை ஒன்று கிடைத்திருக்கிறது. என வ அவர் அமெரிக்க விண்வெளி விமானிகள் குழுவிலிருந்து விலகுகிருர்.

நாசா என்ற அமெரிக்க விண்வெளி நிலையத்தில்தான் இந்தப் புதிய வேலை. நாசாவின் வாஷிங்டன் தலைமையகத்திலே உயர்தரஆராய்ச்சித் தொழில் நுட்பப்பிரிவு ஒன்றுள்ளது. இதில் ஆம்ஸ்ரோங் விமான இயலுக்கான நாசா துணை உதவி நெறியாளராக இருப்பார்.

அரசாங்கத்துக்கும் தனியார் தொழில் துறைக்கும் இடையே விமான இயல் பற்றிய இணையான ஆராய்ச்சிக்கும், தொழில் நுட்பப் பணிக்கும் இவர்தான் பொறுப்புள்ளவராக இருப்பார்.

1962 செப்டம்பர் மாதம் ஆம்ஸ்ரோங் விண்வெளி விமானியானுர். அதற்கு முன்னர் நாசாவின் திறமைமிக்க சோதனை விமானியாக இருந்தார். எக்ஸ்-15 திட்டத்தில் அவர் பணியாற்றினுர்.

பலர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய மோட்டார்த் தொழிற்சங்கத் தலைவர் திரு. கே. நல்லதம்பி உரையாற்றுகையில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் பருத்தித்துறை டிப்போ பஸ் சேவை சீரடைந்து வருவதாகவும், நாளாந்த வருமானம் மேலும் அதிகரித்து உள்ளதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், 'தற்போது நாளாந்தம் பழுதடையும் பஸ்களின் சராசரித் தொகை 15 தான் ஆனல் புதிய அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் சராசரி பழுதடையும் பஸ்களின் தொகை 30 ஆக இருந்தது இன்னும் சில வாரங்களில் எவ்வித குறைபாடுகளுமின்றி நிர்வாகம்

## எம். ஸி. க்கு வரவேற்பு

யாழ்ப்பாணம். செவ்வாய்

புதிய நியமன எம். பி திரு எம். ஸி. சுப்பிரமணியத்துக்கு யாழ். சன்மார்க்க ஐக்கிய வாலிபர்சங்கம் 18ந் திகதி மாலை வரவேற்பொன்றை அளிக்கிறது

திரு என். ஸி. குருநாதர் தலைமையில் நடைபெறும் இவ்வரவேற்புக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள் திருவாளர்கள் அ. விஸ்வநாதன், ஏ ரி. துரையப்பா எம் ஜி. பஜீர் என். ரி செல்லத்துரை ஆகியோர்கள் பேசுவார்கள்.

— —

## 55 வயதில் ஓய்வு

கொழும்பு, திங்கள்

அரசாங்க ஊழியர்களும், கூட்டுத்தாபன ஊழியர்களும் 55 வயதில் ஓய்வு பெறவேண்டுமென அரசாங்கத்தினுல் கட்டாயப்படுத்தப்பட விருக்கிருர்கள்

## மரண அறிவித்தல்

பிரகாச ஆபரண மாளிகை உரிமையாளர் திரு. சோ. ஞானப்பிரகாசத்தினதும், திருமதி ஞானப்பிரகாசத்தினதும் புதல்வி லோகேஸ்வரி 15-6-70 சிவபதமடைந்துவிட்டார். அன்னரின் ஈமக்கிரிகைகள் 16-6-70மாலை4 மணியளவில் மூளாய் மயானத்தில் நடைபெறும் உறவினர் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்சோ ஞானப்பிரகாசம் தொல்புரம், சுளிபுரம். 2120

கமிஷன் கலைக்கப்படுவிட்டது இக்கமிஷனைக் கலைத்துவிட்டதாக விசேஷ வர்த்தமானி மூலம் மகாதேசாதிபதி அறிவித்துள்ளார்.

இந்தக் கமிஷனில் திரு:, வில்மட பெரேரா, திரு, வால்வின், ஏ, டி, சில்வா. டாக்டர் வேனி சங்கர் சேர் ஜோன் வில்லியம் டிராண்டர் ஸ்பின்ஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

— —

## வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

வலிகாமம் மேற்கு. இலங்கைக் கயரோக நிவாரண தேசீய சங்கத்தின் 14வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 17ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி கனிஷ்ட பாடசாலை மண்டபத்தில் வைத்திய கலாநிதி தி. கங்காதரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

— —

## மின்சாரம் வழங்கும் பிரச்னை

மாவிட்டபுரம், திங்கள்.

மயிலிட்டி கிராமசபையில் ஏற்பட்ட மின்சாரம் வழங்கும் பிரச்னை இதுவரையிலும் தீர்ந்தபாடில்லை.

மயிலிட்டி - கிராம சபையில் மயிலிட்டி, கட்டுவன் பகுதிக்கு மின் வழங்க சபை அனுமதித்தும், மின்சபையின் உத்தரவு இல்லாமல் வசாவிளான் - கெட்டகப்புலம் பகுதிக்கு மின் வழங்க நடவடிக்கை எடுத்ததை யிட்டு எழுப்பப்பட்ட பிரச்னையே இன்னும் தீரவில்லை.

இதுபற்றி நேற்று நடந்த சபையின் கூட்டத்தில் 8 ம் வட்டார அங்கத்தவர் திரு. பூ. பொன்னம்பலம் தீர்மானம் ஒன்றை தாக்கல் செய்தார்.

— —

## [illegible]ளத்து ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னவென்ருல் மேற்போக்காகச் சட்டதிட்டங்களை வைத்துக்கொண்டு, தனியார் முதலாளிகளை வர்த்தகத்தில் முதலிடம் வகிக்க இடம்கொடுத்தமையே.

எனவே, முதலாளிகையில் நெல்லை[illegible] போகவிடாமல் அரசாங்கமே நேரடியாக நெல்லைப்பெறவேண்டியது அவசியம் என அவர் மேலும் சொன்னுர்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## ஈழத்துச் சிதம்பர புராணம் அரங்கேற்றம்

காரைநகர், திங்கள்

காரைநகரிலுள்ள ஈழத்துச் சிதம்பரம் என்னும் திருத்தலத்துக்குப் பண்டிதர் சோ இளமுருகனுர் பாடிய தலபுராணமும் அதற்கு அவர் மனைவியார் பண்டிதை பரமேசுவரி எழுதிய உரையும் காரைநகர்ச் சிவன்கோயிலில் நேற்றுக்காலை அரங்கேற்றம் செய்யப்பட்டது. முந்நூற்றுக்கு மேலான தொண்டர்கள் வந்துகேட்டு மகிழ்ந்தார்கள் ஆராதனை முடிந்த பின்னர் இளமுருகனுருக்குப் புலவர்மணி என்ற பட்டமும் உரையாசிரியருக்குப் பண்டிதைமணியென்ற பட்டமும் வழங்கப்பட்டன நூலை விரைவில் அச்சிட்டு வெளியிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில்1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## "மனிதனை மனிதனுக்குவது பக்தி"

தாவடி, திங்கள்

"மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு இறைபக்தி மிகவும் அவசியம். எப்படியும் வாழலாம என்று எண்ணுது இப்படித்தான் வாழவேண்டும் என்று சிறந்த வழி வகுத்து வாழ இறைபக்தி மிக முக்கியம்."

இவ்வாறு திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நடந்த இத்துசமய விருத்திச்சபையின் பதினுன்காம் ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துரையாற்றிய பண்டிதை சைவப்புலவர் திருமதி சௌபாக்கியவதி சுந்தரலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், "பக்தி மனிதனை மனிதனுக்குவதோடு இறைவனேடு ஒன்றுசேர்ந்து அத்துவித இன்பத்தை நல்கும். இத்தகைய பேரின்பத்தை நல்கும் பக்தியை எவ்வாறு பெறலாம்? பிரார்த்தனை மூலம் தான் பெற முடியும். பிரார்த்தனை கூட்டமாகவோ அன்றித் தனியாகவோ அமையலாம். ஆனல் கூட்டுப் பிரார்த்தனையினுல் நான் என்ற அகந்தை நீங்கி எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள் என்ற பரந்த நோக்கமும், சிறந்த பண்பாடும் உண்டாகும். எனவே, கூட்டுப்பிரார்த்தனை மிக மிக அவசியம்" என்ருர்.

பணக்காரர்களைப் போல்

# ஏழைப்பிள்ளைகளுக்கும் சம கல்வி கிடைக்கும்

## உதவி கல்வி அமைச்சர் உறுதி

தல்பாவில, திங்கள்

ஏழைமக்களின் பிள்ளைகளும் வசதியுள்ளவர்களின் பிள்ளைகளைப்போன்று சிறந்த கல்வி பெறுவதற்கு காலஞ்சென்ற எஸ். டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்கா எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை இந்தக் கூட்டணி அரசாங்கமும் தொடர்ந்து கடைப்பிடித்து ஏழைகளின் உயர்வுக்குவழி வகுக்கும் என்று மாத்தறை எம். பி. யும் கல்வி உதவி அமைச்சருமான திரு. பி. வை துடாவதமக்குஅளிக்கப்பட்டவரவேற்பொன்றின் போது கூறினுர்.

திறமையுள்ள பிள்ளைகள் திறமான கல்வி பெறுவதற்கு இருந்துவந்த வசதிகளை கடந்த ஐந்து ஆண்டுகளாக பதவியிலிருந்த அரசாங்கம் இல்லாமல்செய்துவிட்டது. பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பெறுவதற்கு வசதிசெய்து கொடுத்த அவர்கள் ஏழைப் பிள்ளைகள் தகுந்த கல்வி பெறுவதற்கு உதவி புரியவில்லை.

இந்தப்பிள்ளைகள் சிறந்த கல்விபெற்றுவிட்டால் நாட்டில் உள்ள பணக்காரர்களின் ஊழல்களை அறிந்து ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அவர்கள் போராடத் தொடங்கிவிடுவார்கள் என்ற பயமே இதற்குகாரணம் என்று திரு. துடாவ கூறினுர்.

விரைவில் சட்டம் வருகிறது

# தோட்டங்களுக்குள் யூனியன் தலைவர்கள் பிரவேசிக்க அனுமதி

## டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தகவல்

கோட்டை, திங்கள்

தோட்டங்களுக்குள் தடையெதுவுமின்றி தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகள் பிரவேசிப்பதற்கு வசதியளிக்குப் சட்டம் மிகவிரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தோட்டத் தொழில் துறை அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர்டி சில்வா தெரிவித்திருக்கிருர்.

தோட்டங்களுக்குள் இதுவரை காலமும் தோட்டத் துரைமாரின் அனுமதியில்லாமல் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் பிரவேசிக்கவோ தொழிலாளர்களைத் தோட்டங்களில் வைத்து சந்திக்கவோ சட்டம் தடையாக இருந்து வருகின்றது.

இந்த சட்டத்தை மீறிய தின்பேரில் சில காலத்துக்கு முன் மலைநாட்டுத் தலைவர் திரு அப்துல் அஸீஸ், நாயுடு போன்றவர்கள் மீதுவழக்குகள் நடைபெற்றது ஞாபகமிருக்கலாம்.

இந்தத் தடையை ஒழிப்பதற்கும் தொழிலாளர் பிரதிநிதிகள் சுதந்திரமாகத் தமது அங்கத்தவர்களைச் சந்தித்துப்பேசவும்வசதியளிக்கும் விதத்தில் சட்டங்கள் கொண்டுவரப்படு என்று கூட்டணிக் கட்சிகள்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தன. தொழிலாளர் யூனியன்களின் நசுக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் கொடுக்கப்படும் என்று சிம்மாசனப் பிரசங்கத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி விரைவில் சட்டம் இயற்றப்படும் என்று தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்திருக்கிருர்.

லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் தூதுக் கோஷ்டியொன்று அமைச்சரைசந்தித்து தோட்டங்களில்குறிப்பாகதேயிலைதோட்டங்களில் இருந்துவரும் கட்டுப்பாடுகள் பற்றி எடுத்துக் கூறியது. இந்தத் தூது கோஷ்டியிடமே அமைச்சர் மேற்படி சட்டம்பற்றிய உறுதிமொழியை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org